சரஸ்வதி மகால் வெளியீடு — எண் 225

# தமிழிசைப் பாடல்களும் நாட்டியப் பதங்களும்

(வாசுதேவகவி இயற்றியவை)

★



★ ★

★

வெளியீடு

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

1985] [விலை ரூ 5-00

சரசுவதி மகால் வெளியீடு — எண் 225

# தமிழிசைப் பாடல்களும் நாட்டியப் பதங்களும்

(வாசுதேவகவி இயற்றியவை)

★

பதிப்பாசிரியர்:

வேதாந்த விசாரத, வேதாந்த சிரோமணி,
தமிழ்வித்வான் **ந. சீனிவாசன்** அவர்கள்

★



★

வெளியீடு:

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

1985] [விலை ரூ. 5—00

முதற் பதிப்பு : 1985

வெளியீடு :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம்,
தஞ்சாவூர்.

★

பதிப்பகம் :

திருவள்ளுவர் அச்சகம்,
தஞ்சாவூர்.

# வெளியிடுவோர் முகவுரை

தஞ்சையை அரசாண்ட மன்னர்கள் ரகுநாதநாயக்கர். விஜயராகவ நாயக்கர் போன்றவர்கள் சங்கீதம், பரத நாட்டியம் போன்ற கலைகளை போற்றி நன்கு வளர்த்தார்கள். இம்மன்னர்களின் காலத்தில் தமிழிசை மற்றும் கர்நாடக இசை நன்கு வளர்க்கப்பட்டன. இவர்களின் காலத்தில் தான் முத்துத் தாண்டவர் க்ஷேத்ரக்ஞர் போன்றவர்களின் பத சாகித்தியங்கள் உருவெடுத்தன.

நாயக்கமன்னர்களையடுத்து தஞ்சையை அரசாண்ட சகஜி என்னும் மராட்டிய மன்னன், நாயக்க மன்னர்களின் வழியினை பின்பற்றி பத சாகித்ய கர்த்தாவாக விளங்கினான். இம்மன்னனின் காலத்தில் வாசுதேவ கவி, முத்துக்கவி, ராமபாரதி, கிரிராஜகவி போன்ற புலவர்கள் தமிழ் தெலுங்கு மொழிகளில் பத சாகித்தியங்களை அம்மன்னர் பேரில் இயற்றி அர்ப்பணம் செய்தார்கள்.

இப்பதிப்பில் வாசுதேவகவியின் பத சாகித்தியங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த தமிழிசைப் பாடல்களைக் கொண்டு தஞ்சையின் முன்னூறு ஆண்டுகளின் பாரம்பர்யத்தைக் கணக்கிடலாம். மராட்டிய மன்னன் சகஜியின் காலம் பொற்காலமாகும்.

இம்மன்னன் காலத்து 'தியாகேச குறவஞ்சி' என்னும் நூல் மிகப் பிரசித்தி பெற்ற நூலாகும். இந்நூலை ஏற்கனவே சரசுவதி மகால் நூலகமே வெளியிட்டுள்ளது. தற்போதும் இம்மன்னன் காலத்துத் தமிழிசைப் பாடல்களையும் இந் நூலகமே வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமான் முத்துத்தாண்டவர்க்குப் பிறகு தமிழிசைப் பாடல்கள் எவ்வாறு வளர்ந்தன என்பதனை இந்நூலின் வாயிலாக வாசகர்கள் தெரிந்துகொள்ளலாம். பிரபல

மடைந்துள்ள க்ஷேத்ரக்ஞரின் பதங்களுக்கு நிகராக வாசுதேவகவியின் தமிழிசைப் பதங்களைக் கொண்டு பல லட்சணங்களையும் ஒப்பிடலாம். வாழ்க இக்காலத் தமிழிசைத் தொண்டு!

வாசுதேவ கவியின் தமிழிசைப் பாடல்கள் மூலச் சுவடியில் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதனை சமீப காலத்தில் தமிழ் எழுத்தில் படிவம் எடுத்து காப்பீடு வால்யூமாக செய்யப்பட்டுள்ளது. இவ்விரு பிரதிகளைக்கொண்டுதான் திரு. ந. சீனிவாசன் சமஸ்கிருத பண்டிதர் நூலாக பதிப்பித்துள்ளார். தெலுங்கு எழுத்தில் உள்ள மூலப் பிரதியை திரு. ந. விசுவநாதன், தெலுங்கு பண்டிதர் ஒத்துப் பார்த்து சரி செய்துள்ளார்.

இந்நூலைப் பதிப்பித்த திரு. சீனிவாசன், அதற்குதவிய திரு. விசுவநாதனும் நல்ல முறையில் இதனை வெளியிட்டமைக்குப் பாராட்டுக்குரியவர்கள். மற்றும் நூலக நிர்வாகப் பொறுப்பிலுள்ள திரு. அ. பஞ்சநாதன், இதனைச் சீரிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த திருவள்ளுவர் அச்சகத்தாரும் நன்றிக்குரியவர்களாவர். இம்மாதிரி நூல்களை வெளிக்கொணர நிதியுதவும் நடுவண் அரசுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இன்னணம்,

தஞ்சாவூர்,
22—12—1985

**து. இரா. இராமசாமி**, இ. ஆ. ப.
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்

# முகவுரை

தஞ்சையை அரசாண்ட சோழர், நாயக்க, மராட்டிய மன்னர்கள் இசை, நாட்டியம், நாடகம் போன்ற கலைகளைச் சிறப்பாக வளர்த்துள்ளனர். சோழ மாமன்னன் முதலாம் ராஜராஜன் எழுப்பிய பெரியகோவில் கருவறையின் மேல் தளத்தில் நாட்டியத்தின் முக்கிய அம்சமான கரணத்தின் முத்திரைகளைப் பாதுகாத்துள்ளான். இதைப் போலவே நாட்டியத்தின் கரணங்களைச் சிதம்பரம் நடராஜப் பெருமானின் ஆலயத்திலும் காணமுடியும். தஞ்சைப் பெரிய கோவிலில் நடனமாடுவதற்காக நானூறு தளிச்சேரிப் பெண்டுகளை தஞ்சையில் குடியமர்த்தி இக்கலையை வளர்த்துள்ளான் என்பவைகள் வரலாறு கூறும் உண்மைகள். இதனைப் பின்பற்றியே, பிற்காலத்தில் தஞ்சையை அரசாண்ட சோழர், நாயக்கர், மராட்டியர் ஆகியோர் இக்கலையைப் பேணிக் காத்தனர்.

இவர்களில் கி. பி. 1684 — 1711 வரை தஞ்சையை அரசாண்டவன் இரண்டாம் சகஜி மன்னன்.

இம்மன்னனும் முன்னோர்களைப் போலவே கலையின் காவலனாகவிருந்து பல்கலைகளை வளர்த்தான். இவன் ஒரு பெரும் இயற்புலவனாகவும், இசைப் பாடலாசிரியனாகவும் விளங்கியவன். இம்மன்னன் 22 இசை நாட்டிய நாடகங்களையும், சுமார் 208 பதங்களையும் இயற்றியுள்ளான். இவன் இயற்றிய பதங்களைக் கீழே காணும் வகையாகப் பிரிக்கலாம். [1]

| | | |
|---|---|---|
| பக்திப் பதங்கள் | — | 50 |
| பாவப் பதங்கள் | — | 05 |
| வைராக்கியப் பதங்கள் | — | 09 |

---

1. Tanjore as a seat of Music—PP 70

| | | |
|---|---|---|
| சிருங்காரப் பதங்கள் | — | 103 |
| ஹாஸ்யப் பதங்கள் | — | 14 |
| நீதிப் பதங்கள் | — | 24 |
| மங்களப் பதங்கள் | — | 03 |
| ஆக | — | 208 |

மன்னன் பெரும் புலவனுகவும், கலைக் காவலனுகவும் விளங்கியதால் புலவர்களின் கூட்டமும், கலைஞர்களின் கூட்டமும் தஞ்சையைப் புகலிடமாக்கிக் கொண்டனர். தங்களால் கலையையும், கலையால் தங்களையும் மேம் படுத்திக் கொண்டனர். அங்ஙனம் தஞ்சையைப் புகலிட மாகக் கொண்டு மன்னர் சகஜியின் அவைப்புலவராக வாழ்ந்தவர் 'வாசுதேவகவி' என்னும் புலவராவர்.

**புலவர் வரலாறு :**

வாசுதேவகவியைப் பற்றிய முழுச் செய்திகளும் அறிய போதிய சான்றுகளில்லை. இவர் ஒரு அரசவைப் புலவர் மட்டுமல்லாது பன்மொழிப் புலவராகவும் வாழ்ந்தவர். தமிழ், சம்ஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளை நன்கு அறிந்தவர். இவர் இந்த மூன்று மொழிகளிலும் மணிப்பிரவாளப் பதங்களையும் சம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் பல தனித் தனிப் பதங்களையும், தனிப்பாடல்கள் பலவற்றையும் பாடியவர். 'தூதபஞ்சகம்' 'நவரத்தினமாலிகா' என்னும் சம்ஸ்கிருத இலக்கியங்களை சகஜி மன்னன் மீது பாடியவர்.[1]

மேலும் தெலுங்கு மொழியை நன்கு அறிந்தமையால் க்ஷேத்திரீயரின் பதங்களைப் பின்பற்றி தமிழிலும், சமஸ்கிருதத்திலும் பல பதங்களை இயற்றியுள்ளார். பதங்களை இயற்றும் கவிஞன் யாப்பிலக்கணப்

1. Copied vol: 813.

புலமையையும், அலங்கார சாஸ்திரத்தில் ரஸ—பாவமும், இசை நாட்டியத் துறையில் ராக—ரஸ—ஸ்வர—தாள ஞானமும், தலைவன் — தலைவி (நாயக — நாயகி) விஷயங்களை நன்கு உணர்ந்தவர்களுமே உயர்தரமான பதசாகித்தியங்களை இயற்றமுடியும், என்பது முன்னோர்களின் கருத்து.

ஆதலால், இப்புலவர் பெருமான் மேற்படி அனைத்துத் தகுதிகளையும் பெற்றும், மன்னன் சகஜியின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றவன் என்பதும், இவருடைய பதசாகித்தியங்களில் மன்னன் சகஜி மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான் என்பதையும் கீழே காணும் வரிகளால் அறியலாம்.

"தேனிலும் வாசுதேவன் மதுரம் பெரு
செந்தமிழே இனிக்கு தென்றுணை" — (வரச்சொன்ன)

"அருள் வாசுதேவன் மேலே
அன்புவைத் தொருநாள் போலே

வரிசை செய்து" மேன்மேலே
வளர் சாகேந்திர! என்மேலே — (இத்தனை மோடி)

"வாசுதேவன்மீது விசு
வாசம் வைத்து ரக்ஷிக்கும் போச!" (சுருசம் கண்டே)

'வாசு தேவ கவி' என்னும் இந்த நூலாசிரியர் பல ஊர்களுக்குச் சென்று அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்த பல குறுநில மன்னர்களை (ஜமீன்தார்களை)ப் புகழ்ந்து பதங்கள் பாடியுள்ளார். அவர் பாடியுள்ள குறுநில மன்னர்களின் பெயர்கள் வருமாறு:—

1. நிறையூர் வடிவழகநம்பி
2. வருதை சேனுதிபன்
3. ராசை முத்து வீரர்
4. தளவாய் நரசேந்திரன்

மேலும், பல தலங்களிலுறையும் சிவபெருமான், தேவி, முருகன் போன்ற தெய்வங்களைப் புகழ்ந்து தமிழில் பாடியுள்ளார். இறைவன் மீது இயற்றிய பாடல்களையும், நாட்டியப்பதங்களையும் பாடியுள்ளார்.[1]

சகஜி மன்னனின் காலத்திற்கு பின் வாசுதேவ கவியின் பாடல்களில் ஒன்றுகூட இதுவரை அகப்படவில்லை. இதனால் மன்னன் சகஜிக்குப்பின் இவர் தஞ்சையிலிருந்து வேறு சமஸ்தானங்களுக்குச் சென்றிருக்கலாம் என்றும் அறியமுடிகிறது.

## இவர்காலத்துத் தமிழ்ப் புலவர்கள் :

வாசுதேவ கவியின் காலத்தில் வாழ்ந்த அரசவைப் புலவர்களில் தமிழ்ப் புலவர்களாக உள்ளவர்கள் முத்துக் கவிராயர், மகாகவி சப்தரிஷி, ராமபாரதி, ஆகியோர். இவர்களில் வாசுதேவ கவியும், ராமபாரதியுமே சிருங்காரப் பதங்களைப் பாடியவர்கள். முத்துக்கவிராயர் சில பதங்களையும், பாடியுள்ளார் என்று தெரிகிறது. அவர் பாடியுள்ள பாடலில்—

"முத்துக்கவி பதம் பாடி
முல்லை மல்லிகை மலர்சூடி"

என்ற வரிகள் அகப்படுகின்றன. இதனால் இவரும் பதம் பாடியுள்ளார் என்று அறிய முடிகிறது. ஆனால், இவர் பாடிய பதங்கள் கிடைக்கவில்லை.

---

1. 'வாசுதேவகவி எழுதிய பதங்கள் அனைத்தும் மன்னன் சகஜியையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது" என்ற கருத்தை டாக்டர் S. சீதா அவர்கள் தனது நூலில் (Tanjore as a seat of Music—P.148) குறிப்பிட்டுள்ளார். ஆனால் தற்போது தொகுத்து வெளியிட்டுள்ள இந்த நூலில் சகஜியை மட்டுமல்லாது வேறு சில குறுநில மன்னர்கள், தேவதைகள் மீது பாடிய பதங்களும் உள்ளன என்பதையும் அறியலாம்.

மேலும், இந்த முத்துக்கவிராயரும், மகாகவி சப்தரிஷியும் இம்மன்னன் காலத்தில் இயற்றிய குறவஞ்சி நாட்டிய நாடகங்களே தற்போது கிடைத்துள்ள குறவஞ்சி நாடகங்களில் காலத்தால் முன்தோன்றியவை.[1] எனின் மிகையில்லை.

## நடன நிகழ்ச்சிகளும் அவற்றின் காலமும் :

மன்னனுடைய அவையில் தினந்தோறும் நடனம், நாடகம், இசை ஆகிய கலை நிகழ்ச்சிகள் அரசவையிலேயே நடைபெறுவதுண்டு. இதில் பண்டிதர்கள் முதல் பாமரர்கள்வரை அனைவரும் கண்டும், கேட்டும் களிப்பெய்தலாம். ஆனால் மன்னர்கள் இன்பமாகப் பொழுதைக் கழிக்க அரண்மனையின் அந்தப் புரத்து நடன அரங்கில் (இன்று 'சதிர் மாளிகை' என்று அழைக்கப்படும் இடமாக இருக்கலாம்) ''சிருங்கார நாட்டியப் பதங்கள்'' நடைபெற்றுள்ளன. இது தினந்தோறும் இரவு 10 மணிக்குமேல் 2 மணிக்குள்ளாக நடைபெறுமென்றும், இதில் நடித்த பெண்மணிகள் நடனக்கலையை நன்கு அறிந்தவர்களாயும், தேவருலகத்து அரம்பையரை நிகர்த்தவர்களாயுமிருந்தனர் என்னும் செய்திகள் 'போசலம்சாவளி சம்பூ' என்னும் சமஸ்கிருதச் சுவடியில் காணப்படுகின்றன.

## இசைப்பாடல்களின் அமைப்பு முறை ;

இசைப்பற்றி எழுந்த பால பாடங்களைத் தவிர மற்றெல்லாப்பாட்டுக்களும் ஸ்வரம், தாளம், எதுகை, மோனை முதலிய அழகமைந்த சொற்சுவை, பொருட்சுவை ஆகியவற்றுடன் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்கிற

1. மோகினி விலாச குறவஞ்சி—சரஸ்வதிமகால் நூலக வெளியீடு — முகவுரை.

இலக்கண உறுப்பமைந்து காணப்படுகின்றன பல்லவி என்பது ஒரு இசைப்பாட்டின் முதற்பாகம். அனுபல்லவி இரண்டாம் பாகம் சரணம் மூன்றும் பாகம்.

'பல்லவம்' என்ற சொல்லுக்கு 'தளிர்' என்பது பொருள். ஒரு விதை முளைத்து, இலையாகி, கிளையாகி, பூவாகி எங்ஙனம் இன்பமளிக்கின்றதோ அதைப்போல் இசைப் பாட்டு முதலில் பல்லவி என்பதால் கிளைத்தும், அனுபல்லவியினல் வளர்ந்தும், சரணத்தால் ஒன்றுக்கு மேற்பட்ட பற்பல வேறுபாடுகளை அமைத்துக் கொண்ட கிளைகளைப் போல், நமது செவிக்கின்பம் அளிக்கின்றது. பாட்டு, பாடல், பா, செய்யுள், உருப்படி என்பன ஒரே பொருளைத் தருவன. இதனை 'கிருதி' என்று சமஸ்கிருதத்தில் கூறுவர். 'க்ரு' என்ற மூலச் சொல்லுக்கு 'செய்தல்', 'உருவாக்குதல்' என்பது பொருளாகும். இதனுல் 'கிருதி' என்ற பொதுச் சொல்லாலேயே அனைத்துப் பாடல்களையும் அழைப்பது வழக்கமாயிற்று. ஆனுல், கீர்த்தனைக்கும், பதத்திற்கும் பல்லவி, அனு பல்லவி, சரணம் என்ற உறுப்புக்கள் இருந்தபோதிலும், இவ்விரண்டுக்கும் பெருத்த மாறுபாடுகள் உண்டு. அவற்றைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

**கீர்த்தனம் :**

இவ்வகைப் பாடல்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கவேறுபாடுகளுண்டு. இவ்வகைப் பாடல்கள் இறைவனுடைய புகழை மட்டுமே அடிப் படையாகக் கொண்டிருக்கும். பக்திச் சுவையுடன் கூடிய துதிப்பாடல்களாக அமைக்கப்பட்டிருக்கும். இதனுல் இறைவனின் புகழைப் பாடுவதே கீர்த்தனம் என்ற பொருளில் (கிர்த்தயதே இதி கீர்த்தன) காரணப் பெயராக அமைந்தது.

**பதம் :**

நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படிகளில் பதம் என்பதும் ஒருவகை. இதில் மூன்று வேறுபாடுகளுண்டு. பதவர்ணம் அல்லது சௌகவர்ணம் என்றும், ஸ்வர பதம் என்றும் பெயரின. இவைகள் மூன்றுமே விளம்ப காலத்தில் பாடப்படும். குறிப்பாகப் 'பதம்' என்று அழைக்கப்படும் உருப்படி சவுக்க காலத்தில் தான் பாடப்படும். திசிர திருபுடை முதலிய தாளங்களில் அமைக்கப்பட்டிருக்கும்[1]. இவ்வகைப்பதங்கள் இசையின் ராகபாவங்களை மிக நுட்பமான முறையில் காட்டி நமது கர்னாடக இசையின் உண்மையான தத்துவங்களை உணர்த்தக் கூடியனவாக அமைந்திருக்கும். இசையும்—அபினயமும் ஒவ்வொன்றைச் சார்ந்தே அமைக்கப் பட்டிருக்கும். இதனால் பாவ — அபினய பதங்கள் இசைக்கலை வடிவமாகப் புகழ்பெற்று இசை வல்லுநர் களாலும் பின்பற்றப்பட்டிருக்கின்றது. பதங்களின் இசையை மிக்க சௌக காலத்தில் பாடவேண்டியுள்ள தால் ராகங்களின் கமகங்களை மெதுவாகவும், அழுத்த மாவும் வெளிப்படுத்தும். இசைக் கருவிகளில் பதங்களை பாடிக்கொண்டு, வாசிப்பது வழக்கமாயிற்று. இப்பதங் களில் கமகங்கள் அதிகமாக இருக்குமேயன்றிச் சங்கதிகள் இரா.

"பத சாகித்தியங்களை" இயற்றக் கூடிய கவிஞர்கள் பன்மொழியில் நன்கு பயிற்சியுடையவர் களாகவும், அலங்கார சாஸ்திரத்தில் நல்ல பயிற்சியும், நாயக — நாயகியின் விஷயங்களைப் பற்றி நன்கு உணர்ந்தவர்களும், ராக—ரஸ உணர்ச்சியைச் சீராகத் தெரிந்தவர்களாயும் இருக்கவேண்டும். அப்போதுதான் உயர்தரமான பதங்களாகப் புகழ் பெறமுடியும். சாகித் தியம் (பாட்டு) மிக எளிதாக இருப்பினும், அதில் சில பகுதிகள் உட்கருத்துக்களைக் கொண்டனவாக இருக்கும்.

---

1. இசை இயல் — க. பொன்னையா பிள்ளை.

அப்படிப்பட்ட உட்கருத்துக்களை ஆடுவோர் தம் முக பாவத்தின் மூலமும் — ஹஸ்த முத்திரைகளின் மூலமும் மக்களுக்கு வெளிப்படுத்துவர்.

ஒரு பதத்தை ரஸித்து அனுபவிப்பதற்கு அது யாரால் பாடப்படுகிறது? எதற்காகப் பாடப்படுகிறது? பாடுவோரின் நிலை யாது? என்பன போன்ற செய்திகளை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். உயரிய பதங்களின் (பகிர்சிருங்கார—அந்தர் பக்தி) சாகித்தியத்தைக் காணும்போது வெளிப்படையாச் சிருங்காரமாகவும், அதன் உட்பொருள் பத்திச் சுவையுடன் கூடியதாகவும் இருக்கும். நாயக — நாயகி பாவமே முக்கியமான அம்சமாக — அமைப்பாகக் கொண்டு இயற்றப் பட்டிருக்கும். பாடப்பாடப் புதுப்புதுக் கருத்துக்களையும், அபினய முத்திரைகளை காட்டக் கூடியனவாக இருக்கும். பல்லவி, அனுபல்லவி—சரணம் போன்ற அங்கவேறு பாடுகளுண்டு. கடினமான பதப்பிரயோகங்கள் இருக்கக் கூடாது.[1] திராக்ஷா பாகமாகப் பதசாகித்தியங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

## பதவர்ணம் அல்லது சௌக்கவர்ணம்[2]

இதுவும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறையுடன் சிட்டைஸ்வர சாகித்ய ரூபமானது. பல்லவி, அனுபல்லவியிரண்டிலும் இரண்டு பாகமான வர்ணமெட்டமைந்த சாகித்தியம் அமைந்து பின் முத்தாயிஸ்வரம் பெறும். இது சௌக்க—மத்யம காலத்திலேயே பாடப்பெறும். சரணம் சாகித்யமாக இருக்கும். அதையடுத்து முதலில் சௌக்ககால ஸ்வரமும், இரண்டாவது—மூன்ருவது மத்யம கால ஸ்வரமும், வரும். இதில் வரும் சிட்டை ஸ்வரங்களுக்

---

1 கீதகோவிந்தமும் — அதன் வழிநூல்களும். சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் — 32.

2. இசை இயல் — க பொன்னையாபிள்ளை.

கெல்லாம் சாகித்தியம் அமைந்திருக்கும். பதத்திலும், இராகமாலிகை போன்றவற்றில் காணப்படும் விசேஷ மான இராகபாவம் இதிற் காணப்படும். இதில் காணப் படும் சாகித்தியம் சிருங்கார ரஸத்தையே உணர்த்தக் கூடியதாக இருக்கும். இதில் அமைந்திருக்கும் சிட்டை ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் இராகபாவம் அமைந்து, தாள ஒதுக்கத்தோடு கூடியிருக்கும். சில வர்ண ஸ்வரங் களில் தைவதாந்தியம், பஞ்சமாந்தியம் வரும். எந்த உருப்படிகளிலுமே இல்லாத இராக சஞ்சாரம் இந்த பதவர்ணங்களில் காணப்படும். இவற்றில் சில, சித்திர மார்க்க காலத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. சம்பிரதாய முறையில் சிட்சை சொல்லி வைக்கும்போது தானவர்ணம் முடிந்தபின் இவ்வர்ணங்களைச் சொல்வது முறையாகும். இதனால் லய ஞானமும், ராக பாவ ஞான மும் தெளிவாக உண்டாவதோடு ஸ்வரம் பாடுவது இராக பாவத்தோடுதான் பாடவேண்டும் என்ற உணர்ச்சியும் நன்கு ஏற்படுகின்றது.

**சூரபதம்**[1]

இது பல்லவி அனுபல்லவியோடு ஸ்வர எழுத்துக்கள் அர்த்த பாவம் தோன்றும்படியாக நல்ல வர்ணமெட்டில் அமைக்கப்பட்டிருக்கும். பல்லவி, அனுபல்லவிகளுக்குப் பிறகு சிட்டைஸ்வரம், அதற்கு சாகித்யமும் சேர்க்கப் பட்டிருக்கும் இம்மாதிரியில் சில வர்ணங்களே இருப்ப தாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட பதவர்ணம், சூரபதம் போன்ற அமைப்புக்களில் மன்னன் சகஜி பல பாடல்களைப் பாடி யுள்ளான்.[2] இவற்றைப்பற்றிய ஆராய்ச்சி இங்கு அவசிய மற்றது என்பதால் இங்கு விளக்கவில்லை.

---

1 இசையியல்— க. பொன்னையா பிள்ளை.

2 17ஆம் நூற்றுண்டில் தஞ்சையில் பரதநாட்டியக்கலை
— N. விசுவநாதன், தெலுங்குப் பண்டிதர்
சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ்—35

## பத சாகித்தியங்களின் வளர்ச்சி

ஆண்டவனை அடையும் வழிகளில் சிறந்த வழி நாதோபாஸனை. இந்த நாதோபாஸனையால்தான் மனதை ஒருநிலைப்படுத்தமுடியும். எனவே இசையாலேயே இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்கள் இந்த புண்ணிய பாரதத்தில் பலராவர். இசையை வழிபட்டவர்கள் இறைவனைப் புகழ்ந்து பாடியும், இறைவனைத் தன் தலைவ (நாயக) ஞகவும் தன்னைத் தலைவி (நாயகி) யாகவும் கொண்டு வழிபட்டனர். இதனை நாயக-நாயகி பாவம் என்று கூறுவர். இவ்வகையில் பலருடைய பாடல்கள் அகச்சான்றுகளாக இருக்கின்றன. இறைவனை அடைவதற்கு வழி திடமான அன்பே. அந்த அன்பும் (ப்ரேமையும்) அளவு கடந்து ததும்பவேண்டும் என்பதே அடிப்படை. நாயகன் என்ற சொல் பரமான்மாவையும், நாயகி என்னும் சொல் ஜீவான்மாவையும், சகி (தோழி) என்னும் சொல் பரமான்மாவுடன் ஜீவான்மாவை இணைத்துவைக்க முயலும் ஞான குருவையும் குறிக்கும், நாயகனைக் காணுது வருந்தும் நாயகியின் மனோநிலையும். கடவுளைக் காணுது வருந்தும் பக்தனின் மனோநிலையும் ஒருவாறு ஒத்திருக்கும். இத்தத்துவத்தை வெளிப்படுத்துவதே ஸ்ரீமத் பாகவதத்தில் காணப்படும் ராஸக்கிரீடை, கோபிகாகீதம் போன்ற பகுதிகள்.

ஆக, நாயக—நாயகி பாவத்தில் எழுந்த முதல் இசைப் பாட்டு ஜயதேவரியற்றிய 'கீத கோவிந்த மகா காவியம்.' இந்தப் பாடல்களே 'பதங்கள்' தோன்ற- இயற்ற முன்னோடி எனின் மிகையில்லை. இதன் அமைப்பைப் பின்பற்றி தெலுங்கு நாட்டில் க்ஷேத்ரீயரும், கன்னடத்தில் புரந்தா விட்டலரும் பல பதங்களை இயற்றியவர்கள். இவர்களே பதசாகித்தியங்களை இப்படித்தான் அமைக்கவேண்டும் என்ற ஒரு வழியை, மரபைப் புகுத்தியவர்கள். இவர்களுடைய வழியைப் பின்பற்றியே பின் வந்த புலவர்களும் பதசாகித்தியங்களை அமைத்துள்ளனர் எனின் மிகையில்லை.

புரந்தர விட்டலர், க்ஷேத்ரக்ஞர் ஆகியோர் இறைவன்மீது பாடியுள்ள பதசாகித்தியங்களில்சில நாயக-நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்டு பாடியுள்ளனர். இவை 14—15-ஆம் நூற்றுண்டுகளில் எழுந்தபத சாகித்தியங்கள். ஆனல் காலஞ் செல்லச் செல்ல இறைவனைத்தலைவனுகக் கொண்டு பாடிய கவிஞர்கள் மன்னனையோ,அல்லது ஜமீன்தார்களையோ பாட்டுடைத் தலைவனுகக்கொண்டு பாடலாயினர். அங்ஙனம் தஞ்சை மன்னர் இரண்டாம் சகஜியைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு பாடியவையே இந்த நூலில் காணும் பல தமிழ்ப் பதங்கள்.

இதனைக் கருதுமிடத்தில் — "பதங்களின் அமைப்பு புலவனுக்கும் அரசனுக்கும் உள்ள உறவினைக்கூறுகிறது. இங்கு கலையே காதலாகிறது, சகஜி மன்னனும் சிறந்த புலவர். இருவரிடத்திலும் இருக்கும் பொதுத் தன்மை கலைக்காதலே அல்லது மொழிக்காதலே. அந்த மொழிக் காதல், புலவனிடம் பக்தியாகின்றது. அரசர், புலவரிடையே மகிழ்ந்திருந்த காட்சியெல்லாம் கூறுகின்றனர். அரசனைக் காணமுடியாது தவிக்கும் புலவன் காதல் வயப்பட்ட பெண்போல் ஆகிருன். அரசனைக் காணத் துடிக்கிருன். தோழியாகக் கவிதை இவனுக்குக் கைகொடுக்கிறது. தன் கவிதைத் தோழியைத் தலைவனிடத்துத் தூது அனுப்புகிருன். அரசனும் இக்கவிதைத் தோழியின் சொல்கேட்டு மனமிரங்கிப் புலவனுக்குக் காட்சி தந்து மகிழ்ச்சியைத் தருகிருன். பிரிந்தவர் கூடுகின்றனர். காதல் வெற்றி கொண்டு கலந்ததுபோல் இவர் இதயத்துக் குடியிருக்கும் மொழி—கலை ஒன்று சேர்கிறது. இலக்கிய வாழ்வில் / கலைவாழ்வில் / வெற்றி பெறுகின்கினர்.[1] என்ற கருத்து இங்கும் ஏற்புடைத்தாகின்றது.

## தமிழில் பதங்கள் ;

இன்று கிடைத்துள்ள தமிழ்ப் பதங்களைக் கொண்டு கணிக்கும்போது முத்துத் தாண்டவர் இயற்றிய அபினய

1 சாகராஜ அஷ்டபதி-Ed. T.R. தாமோதரன் — முகவுரை

பதங்களே காலத்தால் பழைமையானவை என்று கருத முடிகிறது. இவருக்குப்பின் 'வாசுதேவ கவியின்' பாடல்களைக் கூறலாம். இவருடைய காலத்தில் வாழ்ந்த இராம பாரதியும் பல பதங்களைப் பாடியுள்ளார். என்பதை முன்பு கண்டோம். இவர்களிருவருமே சிருங்கார பதங்களை இயற்றியவர்கள் இவர்களைப் பின்பற்றியே தமிழில் பத சாகித்தியங்களை இயற்றும் வழக்கம் ஏற்பட்டது. இங்ஙனம் இவர்களுக்குப் பின், பிக்ஷாண்டார் கோவில் சுப்பராமையர், கனம் கிருஷ்ணயர், பரிமளரங்கன், மூவலூர் சபாபதி ஆகியோர்[1] பதங்களைப் பாடியுள்ளனர்.

**பதங்களின் முத்திரைகள் :**

பாடல்களை இயற்றும் கவிஞர்கள் (சாகித்யகர்த்தாக்கள்) அப்பாடல்களில் (சாகித்தியங்களில்) தங்களது பெயர், அல்லது புனை பெயர்களைக் குறிப்பிடுவது வழக்கம். இதனை சாகித்தியகர்த்தாவின் முத்திரை என்று அழைப்பது வழக்கம். இதன்படி இக்கவிஞர் தனது இயற்பெயரான 'வாசுதேவ' என்றே பதங்களில் குறிப்பிடுகிறார்.

இவருடைய பெயரே (முத்திரை) இல்லாத சில பாடல்களும் இருக்கின்றன. அவற்றைக் கூர்ந்து ஒப்பு நோக்கும்போது அவைகளும் இக்கவிஞருடைய பாடல்களே என்பதை உணர முடிகிறது. விளக்கம் வருமாறு :

**முன்னெதுகை**

*முத்திரையுள்ள பாடல்*

தோடிமு காரிகள்
பாடிவி னோதமாய்
கூடிமுன் போல்விளை
யாடிமுத் தாடவே

— எடுப்பு - வாடி வாய்முத்தம்

1 Tanjore as a seat of Music-Dr, S. Seetha P, 131

*முத்திரையற்ற பாடல்*

வாரான் குவிமுலையில்
சேரான் இங்கிதந்
தாரான் என்முகம்
பாரான் திருவல்லி
யூரான் சண்முகன்

— எடுப்பு :- பேராசை தீராதே

## பின்னெதுகை

*முத்திரையுள்ள பாடல்*

மல்லிகை சுகந்தங்கள் கூட
மதுரமாகவே இசை பாட
அல்லிலெந்தனைக் கூட
அமுத நிலைகள் நாட
வில்லியும் பயந்தோட
விசித்திரமாய் விளையாட

எடுப்பு : இப்போ வரச் சொல்லடி

*முத்திரையற்ற பாடல்*

மன்னுமுன் கிருபைதான் கஞ்சம்
வண்டுநேராமென் நெஞ்சம்
என்னையாளாது கொஞ்சம்
கன்னியமிர்த பிஞ்சம்
உன்னையல்லால் பிரபஞ்சம்
பின்னைவேறுண்டோ தஞ்சம்

— எடுப்பு : தேவியுன்பாதம்

## மோனையுடன் பின்னெதுகை :

*முத்திரையுள்ள பாடல்*

அன்னவசனந் தடுத்து
ஆசையாய் மடலெடுத்து
உன்னைச்சதமென் றடுத்து
ஊரோமலானேன் விடுத்து

— எடுப்பு : மோடி ஏனையா?

*முத்திரையற்ற பாடல்*

அந்தநாளில் சொன்ன பேச்சு
ஆணையும் வீணே போச்சு
உந்தன் மையல் கொண்டு மேச்சு
ஓர்நாளோருக மாச்சு

எடுப்பு : என்னதான்கோபம்

ஆதலால் வாசுதேவ கவி இயற்றிய பாடல்களில் சில பாடல்கள் முத்திரையுடனும், சில பாடல்கள் முத்திரை யில்லாமலும் இருக்கின்றன. மேலும் இப்பாடல்களனைத் தும் தமிழ்ப்பாடல்களாயினும் தெலுங்கு எழுத்திலேயே எழுதப்பட்டு ஒரே சுவடியில் காணப்படுவதால் அனைத் துப் பாடல்களுமே வாசுதேவகவியின் பதங்களே என்று கருதுவதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

## சரித்திரக் குறிப்புகள் :

மராட்டிய மன்னர்களின் ஆட்சியிலேயே மிகச் சிறப் பாக ஆட்சி செய்தவன் இரண்டாம் சகஜி. இவனுடைய காலத்தை பொற்காலம் என்று கூறலாம். மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். பலகலைகளும் பேணிக்காக்கப் பெற்றன. இம்மன்னனுடைய காலத்தில்தான் பல இலக்கிய, இலக்கண, சாஸ்திர, சங்கீத நூல்கள் தஞ்சை யில்தோன்றின. பல நாடகங்கள் தோன்றின. இவனுடைய காலத்தில் தோன்றிய தமிழ்க் குறவஞ்சி நூல்களே தற் போது கிடைத்துள்ள நூல்களிலேயே காலத்தால் பழமை யானவை. இதனால் குறவஞ்சி பிரபந்தம் மறுமலர்ச்சிய டைந்தது. இவனது காலத்தில் பல தமிழ்ப் பதங்கள் இயற் றப்பட்டன. நாட்டியத்தின் தொன்மையான மரபு பேணிக் காக்கப்பட்டன. இவனது காலத்தில் சம்ஸ்கிருதமும், தமிழும் வளர்க்கப்பட்டன. இவனது அரசவையில் தினந் தோறும் பல வியக்கத்தக்க விநோத கேளிக்கைகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. புலவர்களின் புதுப்புது

நூல்கள் அவையில் அரங்கேறின. இப்படிப்பட்ட அரசவையைப் புகழுகிறார் கவிஞர்.

“ சந்ததமும் உன்னுடைய சபையில் அதிசயமும்
இந்த வைபவமும் எவர்க்கும் எளிதோ ?

— எடுப்பு : சமூகம் கண்டேனே

“ கட்டியத் தொனி முழங்கக் கவிவாணர் கொண்டாட
நட்டணையுடன் மடந்தையர் நடனம் புரிய
மட்டுலாவும் சங்கீத வாத்தியம் முழங்கும் சபையில் ”

— எடுப்பு : மின்னார்

## கோபால சக்கரம் :

தஞ்சை நாயக்க மன்னர்கள் தங்களுடைய வழிபடு கடவுளாக மன்னார்குடி ராஜகோபால ஸ்வாமியைக் கொண்டிருந்தனர். இப்பெருமானையே தங்களுடைய தங்க நாணயத்தில் பொரித்தனர். இதனால் இக்காசு ‘ கோபால சக்கரம் ’ என்று அழைக்கப்பட்டது. இந்தக் காசு நாயக்க மன்னரின் ஆட்சி தஞ்சையில் வீழ்ச்சியடைந்த பின் மராட்டியரின் ஆட்சியில் சகஜியின் காலத்திலும் செலாவணியில் இருந்திருக்கிறது என்பதை கீழே காணும் வரியால் அறியமுடியும்.

“ கோபால சக்கரப் பொன் கையில்காணுவிட்டால் ”

— எடுப்பு : பொதுமாதராசை

## ஜுல்பிர்கானின் படையெடுப்பு :

டில்லி பாதுஷா ஔரங்கசீப் தனது தளபதி ஜுல்பிர் கானை செஞ்சியின் மீது போர்தொடுக்க பெரும்படையுடன் அனுப்பினான். அப்போது செஞ்சியை ராஜாராமன் (சத்ரபதி சிவாஜியின் மகன்) ஆட்சி செய்துகொண்டிருந்தான். இதனால் ஜுல்பிர்கானுடன் போர் தொடுக்க தனக்கு படைகொடுத்து உதவி செய்யுமாறு மன்னன்

சகஜியை கேட்டுக் கொண்டான். செஞ்சி ராஜாராமின் கோரிக்கையை நிறைவேற்ற தஞ்சையிலிருந்து பெரும் படையை செஞ்சிக்கு அனுப்பி உதவி செய்தான். செஞ்சிப் படையுடன் தஞ்சைப் படையும் இணைந்து போர் தொடுக்க அதில் (ஜுல்பிர்கான்) டில்லிப்படை தோல்வியைத் தழுவியது என்பவை சரித்திரச் செய்திகள்.

இந்த சரித்திர முக்கியத்துவம் உள்ள போரைக் குறித்து இம் மன்னனுடைய காலத்தில் தோன்றிய (சம்ஸ்கிருதம்-தமிழ் ஆகிய) நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளன. இதைப் போலவே இந்தப் பதங்களை இயற்றிய வாசுதேவகவியும் "தப்பியோடிப் போங்கள் — முகலரே" என்ற பல்லவி அமைந்த பதத்தில் குறிப் பிடுகின்றார்,

மேலும், வேலூர்-செஞ்சி முதலிய பகுதிகளில் நடை பெற்ற போரைப்பற்றிய செய்திகளைக் குறித்து "நிறை யூர் வடிவழக நம்பிமீது" இயற்றிய பதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. மற்றும் 'வருதை சேனாதிபன்', ராசை முத்துவீரர், தளவாய் நரசேந்திரன் ஆகியோர் மீது பதப் பாடல்களியற்றப்பட்டுள்ளன. இவர்கள் யார்? இவர் களின் நிலை யாது? என்பவைகளை அறியமுடியவில்லை.

**மணிப்ரவாளப் பதங்கள் :**

இவர் பல பாடல்களில் சம்ஸ்கிருதச் சொற்களைக் கையாண்டுள்ளார். (தெலுங்கு—தமிழ்) மணிப்பிரவாளப் பாடல்களையும் பாடியுள்ளார் :

இபகும்பம் இவள் தனத்துக்கீடு—தீனிகி
ஈ ஜகதுலோ லேது ஜோடு
அபரஞ்சியாலிழைத்த தோடு—நீகு
ஆதல் மைனதி ஓஅய்ய நாதோடு.

எடுப்பு—உமக்கேத்தவகைக்காரி

மேலும், தெலுங்கு மகளொருத்திக்கும் — தமிழ் மகளொருத்திக்கும் உரையாடல் போல ஒரு பாடல் அமைக்கப்பட்டுள்ளது. இம்மன்னன் காலத்தில் நடை பெற்ற நடன நிகழ்ச்சிகளில் 'சம்வாத தரு' என்ற பெயரில் நடைபெற்றுள்ளது. அங்ஙனம் அமைந்த பாடலொன்றில் தெலுங்கும் தமிழும் மாறிமாறி வந்து மணிப்பிரவாள நடையில் அமைக்கப் பெற்றுள்ளது. இதனை அந்தாதித் தொடராக பாடல் முழுதும் அமைத்திருப்பது சிறப்பாக உள்ளது.

*தமிழ் மகள்*

ஆதி நாள் முதல் என்னை அணைந்த சாகேந்திரனை
தூது விட்டழைத்தது துணிவோ வடுகச்சி ?

*தெலுங்கு மகள்*

வடுகச்சி யனி செப்புதாவு அரவதா ந
படுசுநிம்மனி நீதோ பலுகக வொச்சிநி ?

எடுப்பு : ஆதிநாள்முதல்

*வாசுதேவகவியின் பதங்களில் பயன்பாடு பெற்றுள்ள*

**பழமொழிகள் :**

''அடிக்கும் காத்துக்கெல்லாம் படல்கட்டக் கூடுமோ?'' —
''ஆடப்போன தீர்த்தம் அருகில் வந்தாற்போல்''—
''ஆடு திருடின கள்ளன் போல் பார்வை''—
''ஆனை உண்டகனிபோல''—
''உழக்கில் கிழக்கு மேற்குண்டோ ?''
''எள்ளுவிழ இடமில்லை—''
''கரிராஜன் அருந்திய கபித்தம் போல''—
''தேனும் வேம்பும் கலந்தால் தித்திப்பாகுமோ ?''—
''தேடிய பொருள் கையில் சிக்கினுப் போலே''—

"தோளிலிருந்து மெள்ளச் செவியைக் கடித்ததுபோல்"—
"நாலுவழிதேடி ஓடி நரிபோல் பதுங்கி"—
"பத்திலே பதினென்ருய்ப் பாராமல்"—
"பணத்துக் கொருபணி விடையாமோ ?"—
"மத்தகஜம் மாவுத்தன் வார்த்தைக்கடங்குதல் போல்"—
"வன்னிமுன் மெழுகுபோல்"—
"வளர்த்தகடா கையில் பாய்ந்ததுபோல்"—
"வாசமலரை நாடிவருமளி போலே"—
"வெட்டிக் கழுகுக்கு விருந்துபோட'!—
"வேலி பயிரழித்தால் விளையுமா ?"—

**புலவன் மன்னனைப் புகழ்ந்து கூறிய அடைமொழிகள் :**

"கண்ணன் நிகர் தஞ்சையில் சகஜி'!—
"கவிஞர்க்கருள் கர்ணன்"—
"கலைவல்லவன் சகஜி மகிபன்"—
"சங்கீத லோலன் ஸ்ரீ சாகேந்திரன்"—
"செஞ்சொல் வாணர்க்குபகார"—
"செந்தமிழ் வாணர்க்குபகார"—
"செந்தமிழ்க் கருள்மணி சாகேந்திரன்"—
"தப்புரையாத சகஜி ராஜன்"—
"துட்ட நிக்ரக சீல சிட்டன் சகஜிராஜன்"—
"தேனிலும் வாசுதேவன் மதுரம் பெரு
செந்தமிழே இனிக்தென்றனை"—
"நவரஸாலங்கார காவ்யரசிக !"—
"நாஞகலாபிரவீண ! நாத ! சகஜிபூப"—
"பூலோகதேவேந்திரனே"[1] —

---

1 "பூலோக தேவேந்திர விலாசம்" என்ற பெயரில் சகஜி மன்னன் மீது இயற்றப்பெற்ற நாடகமொன்றுள்ளது என்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது.

## புலவன் தரும் தன்னிலை விளக்கம்.

" அருணாசலதேவன் மேலே
அன்புவைத்தொருநாள் போலே
வரிசைசெய்து" மேலமேலே
வளர் சாகேந்திர! எனமேலே—

"சந்ததம் வாசுதேவன் தமிழினல் துதித்து"—
"செந்தமிழ் நிபுணனை ஸ்ரீவாசுதேவகவி"—
"செந்தமிழ் வாசுதேவகவி"—
"தமிழ் வாசுதேவன்"—
"தேடரிய தமிழ் வாசுதேவன்"—
"நற்றமிழ் வாசுதேவன்"—
"பாடகர் தேசாதியுடன் பூபாள தேவகாந்தாரி முழங்குமூர்
கூடியே வாசுதேவகவி பதம் பாடுமூர்"—

" பைந்தொடி! அவளிதழ்
அந்த வாசுதேவன்
செந்தமிழ் போல
சிறந்து இருக்கும்"—

"வாசுதேவகவி செஞ்சொல்லால் மகிழும்
ஸ்ரீ சாக பூபாலன்"—
"வாசுதேவன் மேல் விசு
வாசம்வைத்து ரட்சிக்கும் போச!"—
" வாசுதேவகவி சொல்லுக்குகந்தருள் "—
" வாசுதேவகவி நித்தம் துதிக்கும்"—

**வேற்றுமொழிச் சொற்கள் :**

இருகையாலும் 'சலாம்' செய்து, வாஹ்ரே,

**அடுக்குச் சொற்கள் :**

படபட, உருகி உருகி, ராச ராச, வந்து வந்து, கூகூ வென்று,

## சுவடியின் வரலாறு :

இந்த நூலகத்தின் சம்ஸ்கிருதப்பிரிவில் டாக்டர் பர்னல் கேட்டலாக் எண் 11649ல் வாசுதேவகவியின் பாடல்களைக் கொண்ட சுவடி பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ் மொழிப் பாடல்களைத் தெலுங்கு எழுத்தில் எழுதியுள்ளனர். இச்சுவடியில் 94 ஏடுகள் இருக்கின்றன. இச்சுவடியைப் தமிழ்ப் பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளது (Copied vol 813) இவற்றை வைத்துக் கொண்டு இந் நூல் வெளி வருகிறது- இதில் பல பாடல்கள் குறைந் தும், நிறைந்தும் இடம் மாறியும் காணப்படுகின்றன. அந்தந்தப் பதங்களுக்கு உரிய இராக-தாளங்கள் காணப் படவில்லை; இதனால் எனது அனுபவத்திற்குரிய முறை யில் இராக-தாளங்களைக் குறித்துள்ளேன்- இசை யாராய்ச்சி செய்ய உதவியாகப் பதங்களைப் பிரித்து உரிய முறையில் வெளியிட்டுள்ளேன். ‘தலைவி’ என்னும் சொல் ஒப்பாருமிக்கருமின்றியிருப்பவளையே தொல் காப்பியம் கூறும். ஆனால் இங்கு நான் குறித்துள்ள “தலைவி” என்னும் சொல் “நாயகி” என்பதையே குறிக்கும் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நன்றியுரை :

இந்தப் பதசாகித்தியங்களின் சிறப்பைக் குறித்துப் பலர் ஆய்வு செய்திருந்தபோதிலும் இந்நாள்வரை இந்தப் பத சாகித்தியங்கள் அச்சில் வெளிவரவில்லை. மேலும், இந்த அரண்மனைப் புலவனாக வாழ்ந்த வாசுதேவ கவி பாடியுள்ள ஒரே ஒரு சுவடிதான் இந்த சரஸ்வதி மகால் நூலகத்தில் இருக்கிறது. இந்த நூலை வெளியிடவேண் டும் என்ற ஆவலை முதன்முதலில் தூண்டியவர் எனது அருமை நண்பரும், இந்நூலகத்தின் தெலுங்குப் புலவரு மான திரு. N. விசுவநாதன் அவர்கள். அவர்களின் துணையுடன் இந்நூல் மூலச் சுவடியுடன் ஒத்துப் பார்க்கப் பட்டது. அன்னாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்

கொள்கிறேன். இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை எனக்கு நல்கிய இந்நூலகத்தின் முன்னாள் இயக்குநரும் மாவட்ட ஆட்சியருமான திருமதி OP. சோசம்மா, I.A.S. அவர்களுக்கும் இந்த நூலுக்குச் சீரிய முறையில் அணிந்துரை நல்கிய இந்நூலக இயக்குநரும் மாவட்ட ஆட்சியருமான உயர்திரு T. R. ராமசாமி, I.A.S. அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் பதிப்பிக்க உரிய உதவிகளைப் புரிந்த இந்நூலக நிர்வாக அதிகாரி உயர்திரு. A. பஞ்சநாதன், M.A. B.Lib SC. அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலை அழகுபட அச்சிட்டுக் கொடுத்துள்ள தஞ்சை திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாம் சகஜி மன்னன் முடி சூடிக்கொண்ட 300-ஆவது ஆண்டான இவ்வாண்டு இந்த **"தமிழிசைப் பாடல்களும் நாட்டிய பதங்களும்"** வெளிவருவது சாலப் பொருத்தம். இதிற் காணும் குற்றங் குறைகளைக் குறித்து எமக்கு எழுதித் தெரிவித்தால் அடுத்துவரும் பதிப்பு திருந்திய பதிப்பாக வெளிவர அது உதவும். எல்லாம் வல்ல இறைவன் இது போன்ற நற்பணிகளை மேலும்மேலும் செய்ய அருள்புரிவானாக.

அன்பன்

**வித்வான் ந. சீனிவாசன்**
சமஸ்கிருதப் பண்டிதர்

தஞ்சாவூர்
14—6—85

# AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures solely inherited by the Nation, and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind,

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also of the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowleged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift,

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library'. It is open to you to share the honour of Serfoji, in your own measure, by contributing your manuscripts to the great institution built by him,

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

Collector & Director,
T. M, S. S. M. Library, Thanjavur

# செண்பை நகர் ஆடவல்லான் மீது பதம்

*இராகம் :* வசந்தா *தாளம் :* ஆதி

*பல்லவி*

என்னதான் கோபமென்மேல்? (என்ன)

*அனுபல்லவி*

அன்னமுலாவுஞ் செண்பை
ஆடவல்லீசனுரே !

*சரணங்கள்*

1) மாரன் பூங்கணை எய்ய
மடவார் தினமும் வெய்ய
வாரீரொரு பூசல் செய்ய
வாடி நான் ஏது செய்ய
தொழு மாமுனி வாடவதுங்க
மழு கூகையிலே மாமுக லிங்க
புழுகாயிலி வீதிவிடங்க
அழகிய நாயகி பங்கதுங்க
தல்லாங் கிடதக கிடதரி கிடகிட
தாதிக்க தோதிக்க தக்கதின்ன தகதிரா. (என்ன)

2) அந்த நாளில் சொன்ன பேச்சு
ஆணையும் வீணே போச்சு
உந்தன் மையல் கொண்டுமேச்சு
ஒரு நாளோருக மாச்சு
கரியுரி கம்பளந்தரி வேத
அரிபணியும் பாத விநோத
பரிமளசேட பரிபுர நாத
.... — — .... — ....
தல்லாங் கிடதக கிடதரி கிடகிட
தாதிக்க தோதிக்க தக்கத் தின்ன தகதிரா (என்ன)

3) செல்வ மாரன் என்னைவந்து தேனூற
வில் மறந்து லகினில் வருமெந்தன்
.... ... .... .... ---- ----
---- .... ---- .... ---- ----
திருமா மறைதேடு உலாச
ஒருவமுனி யுடையில் வாச
பருவ யிசை பாடவல்லேச
அரிதாகிய ஆடவல்லீச
தல்லாங் கிடதக கிடதரி கிடகிட
தாதிக்க தோதிக்க தக்கத்தின்ன தகதிரா (என்ன)

---

## பேரளம் சம்புநாதர் மீது பதம்

இராகம்: பூர்விகல்யாணி தாளம்: ஆதி

*பல்லவி*

சருகுதேரகம் சம்புநாதரை
சமயத்தில் வரக் காணேன். (சருகுதே)

*அனுபல்லவி*

பரிமளம் வீசிய பேராளநாதரை
வங்கணம் கூட்டிக்கொண்டு இங்கிதஞ் செய்ய
(சருகுதே)

*சரணங்கள்*

1) சந்திரன் தழல் வீசுதே - உய்ய
சரீரமெல்லாம் மெத்த நோகுதே - அய்ய
இந்த இரவினில் மன்மதன் எய்ய
சிந்தை கலங்குதே யானென்ன செய்ய.
(சருகுதே)

2) மன்மதன் ஏனோ என்மீதில் - வாது
மனது தரிக்குதில்லை மையல் இப்போது
உன் மோகம் கொண்டேன் தரிக்கப் போகாது
ஏதுதான் இத்தனை அட்டியாகாது (சருகுதே)

3) உன்னாசை கொண்டேன் உள்ளமே - வாடி
உருகுதே ஆசை மோகமே கூடி
பெண்ணாசை கொண்டேன் மனதிலே நாடி
பேராள நாதரைக் காணாமல் தேடி (சருகுதே)

---

## ராசை கைலாசநாதர் பேரில் பதங்கள்

### I

*இராகம்:* காபி *தாளம்:* ஆதி

*பல்லவி*

[1]வாராய் சாகேந்திரா நின்போலே - வாசு
தேவகவி மீதினில் பக்ஷம் வைத்தது போலே.
(வாராய்)

*அனுபல்லவி*

கருணை செய்து மருவானே
முன்போல் என்மீதிலே (வாராய்)

*சரணங்கள்*

1) மையல் பெருகப் போமோ மதிமானே - அவர்
மாரீசகார ரென்றும் அறியேனே
கையில் நெல்லிக் கனிபோலே இருந்தேனே-ராசைக்
கைலாச நாதருடன் தினந்தானே (வாராய்)

2) இந்த வேலையிலோடி வாராரோ - நான்
இருந்த தனிமை யெல்லாம் பாராரோ
சிந்தை மகிழ்ந்து என்னைச் சேராரோ - அவர்
தந்தாசை தீர முத்தந் தாராரோ. (வாராய்)

---

1) வேறு பதத்தின் பல்லவியே இங்கு (சுவடியில்) காணப்படுகிறது.

## II

இராகம் : பிலஹரி தாளம் : ஆதி

பல்லவி

அருமை அறிவார் ஒருவரையும் காணேன் - இதை
யாருடன் உரை செய்வேன் - இனி நானே
(அருமை)

அனுபல்லவி

மாரன் தானுமினி வருவானே - வந்து
சதகோடி பாணங்களை விடுவானே - என்மேல்[1]
(அருமை)

சரணங்கள்

என்னுசை என்மனதில் அடங்காதே - மனம்
என்ன சொன்னலுமினிக் கேளாதே
கன்னிமாரோசமினிப் பொருந்தாதே - ராசை
கயிலாசநாதருடன் தினந்தானே. (அருமை)

---

## மணக்குறிச்சி மேவிய அங்கையற்கண்ணி மீது பதம்

இராகம் : பாகேஸ்ரீ தாளம் : ஆதி

பல்லவி

தேவி ! உன் பாதம் நம்பினேன்-அநுதினம் (தேவி)

அனுபல்லவி

தேவி சுகந்தமலர் வாவிய மணக்குறிச்சி
மேவிய சொக்கர் பங்கி லாவியங்கையற்கண்ணி
(தேவி)

சரணங்கள்

1) மன்னுமுன் கிருபைதான் கஞ்சம்-(கஞ்சத்தில்விழும்)[1]
வண்டுநேராமென் நெஞ்சம்
என்னையாளாது கொஞ்சம்
கன்னியமிர்த பிஞ்சம்
உன்னையல்லால் பிரபஞ்சம்
பின்னை வேறுண்டோ தஞ்சம். (தேவி)

---

1) திரும்பப் பாடும்போது சேர்த்துக் கொள்க.

2) சந்திர வம்ச குலதீபம் - (தீப விலாசம்)
தரித்திராந்தகார சாபம்
உந்தனருள் பிரதாபம்
தந்ததே ஆற்றும் லாபம்
எந்திர தந்திர சொரூப
மந்திர சொரூபாரூபம். (தேவி)

3) திக்கு விஜய மீட்சி - (அருள்வீட்சி)[1]
செகத்ரட்சகி கடாச்சி
சாரதேஸ்வரி மீனாட்சி
விக்ரமலோக சாட்சி
மிக்க வேதாந்த சூட்சி
சொக்கர் பங்கில் மீனாட்சி (தேவி)

---

# திருவல்லையூர் சண்முகர் மீது பதங்கள்

## I

இராகம் : சகானா தாளம் : ஆதி

*பல்லவி*

பேராசை தீரானோ! பிராணேசன் வாரானோ!
சீராரும் செங்கனிவாய் தேனூரல் தாரானோ!
(பேராசை)

*அநுபல்லவி*

வாரான் குவிமுலையில்
சேரான் இங்கிதந்
தாரான் என்முகம்
பாரான் திருவல்லை
யூரான் சண்முகன் (பேராசை)

---

1) இந்த சொல்லைக் கொண்டு அடியைத் திருப்பவும்.

சரணங்கள்

1) சிந்தை உருகுதே
தேகம் மெலியுதே
இந்து நிலவும் வந்துதே
என்மீதில் காயுதே
விந்தை மேலாகுதே
விழியுந் துயிலாதே
ஐந்து கணை மதனன்
வந்து முடுகிய, பின்
வந்து முன்னும் வர
தந்திடும் மாலே (பேராசை)

2) கங்குல் வருகுதே
கலவி மயக்குதே
இங்கே மதக்குயில்
இப்போ தழைக்குதே
மங்கை மாரேசுதே
மார்முலை நோகுதே
குங்கும முலையாள்
இங்கித நகையார்
செங்கையினாற் செய்த
அங்கச லீலை (பேராசை)

3) நல்லுற வாகியே
நயலீலை நாடியே
முல்லை மலரணைமேல்
முத்து முத்தாடியே
சல்லாபந் தேடியே
சய்யோகங் கூடியே
சொல்லிசை நேரிழை
வல்லி சதாசிவ
மெல்லியலர் திரு
வல்லையில் வேலர்

## II

இராகம் : பைரவி தாளம் : சாபு

*பல்லவி*

காதலாய் மனம் காயுதே - கன்னியென்னுசை (காதல்)

*அனுபல்லவி*

தீத்ழல் செவி பாயுதே சண்முக வேலவர்க்கு
ஆதரவாக வரயுதே (காதல்)

*சரணங்கள்★*

1) காதலானர் என்னைப்போல் ஆவலாதியாயிந்தக்
காசினியில் கண்டதுண்டோ மெல்லியே
சொல்லாய்த்
தோதகமே செய்தாரெந்தன் மீதிலுறவாயினிச்
சொல்வதேது அவன்நீதி ? தோகையே கேளாய்
(காதல்)

---

# தென்பழசை வேலர் மீது பதம்

இராகம் : தோடி தாளம்: கண்டசாபு

*பல்லவி*

என்ன செய்வேனேடி?
இதுக்கு நான் ஆளோடி?—மின்னே ! (என்ன)

*அனுபல்லவி*

மின்னே ! **பழசை வேலர்**
விரகம் பொல்லாதோடி ? (என்ன)

*சரணங்கள்*

1) மாரன் கணையெய்ய; மதி தழல் பெய்ய
சேராத மடவார் தினந்தோறும் வெய்ய
பாரென் முகனையோ பாவிநான் என்செய்ய

**ம. காலம்**

கோடி வயதிலே மோடிபிச்சை
தேடி இரவெல்லாம் வாடுதே மனது (என்ன)

---

★ மற்ற இரண்டு சரணங்கள் சுவடியிலில்லை.

2) ஆவியும் நோகுதே ஆகமும் வேகுதே
பாவையராலே சண்டை பாரதமாகுதே
மாவனை சோருதே மாங்குயில் கூவுதே

மட காலம்

சிந்தை உருகுதே நைந்துசிவசிவ
தொந்த மயலி லைந்திள மானே (என்ன)

3) வானோர் பணிகுவர் வள்ளிமணவாளன்
காரைக் குழலாள்சிவ காமிதரு பாலன்
தேனூர் மொழிசீலன் தென்பழசை வேலன்

ம, காலம்

சித்தமுருகியே மெத்தமலரணையில்
நித்த மருவியே முத்தமிட்டாரோ? (என்ன)

---

## ஆரூர் சிங்காரவேலர் மீது பதம்

இராகம்: ஷண்முகப் பிரியா தாளம்: கண்டசாபு

*பல்லவி*

மின்னே! இன்னேர மென்னடி?
அவருக்கங்கே (மின்னே)

*அனுபல்லவி*

தென்னாரூர் தனில் வாழும்
சிங்கார வேலர்க் கங்கே (மின்னே)

*சரணங்கள்*

1) சையோகம் அங்கு என்று குறித்தாரே—அவர்
மையல் கொண்ட என்னைப் பிரிந்தாரே—அவர்மீதில்
எய்யும் மதனன் வில்லைப் பறித்தாரே—அங்கே
மையல் கொண்டு மாதர் வழியை மறித்தாரே
(மின்னே)

2) ஆதித்தன் அத்தமனம் ஆம்போதென்னை நாடி
காதல் மயில் வாகனம் மீது பவனியாக
வீதியில் வருவார்க்கு ஏது ஆவடத்திலே
பாதி இரவாயும் என்ன சோதனையோ! தெரியாது
(மின்னே)

---

## நிறையூர் வடிவழக நம்பிமீது பதம்

*இராகம் :* கல்யாணி *தாளம் :* ஆதி

*பல்லவி*

கனராச காரியமிது காணவசமோ — சுகந்த
(கனராச)

*அனுபல்லவி*

வனவாச நிறையூரில் வடிவழக நம்பி ! (கனராச)

*சரணங்கள்*

1) கல்யாண தேசம் கலிங்கதேசம் - தலை
மெல்லிய மாயா புரியை வெளியாக்கியே
வல்லாள புரத்தரசர் வந்துகைப் பிடியாக
சல்லாபத்துடன் வந்து சந்திரகிரி கொண்டார்
(கனராச)

2) ஆதிவேலூர் கலங்க அளகாபுரம் தொலைய
வீதி தோரு லாடபுரம் விருது விடவே
கீதமிகக் காந்தார தேச முறையிட்டலற
மாதுபல்லவ தேசம் வளந்தூரல் கொள்ள (கனராச)

3) அத்திளுபுரம் வளைந்த அங்கதேசாதிபதி
சுத்த விசயாபுரமும் சுரங்கம் நடத்தி
வெற்றி விசயம் கொண்ட லோக பட்டாபிஷேகம்
தத்த வஞ்சி மணவாள ! வடிவழக நம்பி
(கனராச)

---

## வருதை சேனுதிபன்மீது பதம்

*இராகம் :* சகாரு *தாளம் :* ஆதி

*பல்லவி*

எந்தன் விரக வெள்ளம் தானே - மானே !
எதற்குரை செய்குவேன் - நானே (எந்தன்)

*அனுபல்லவி*

சந்திரவதனன் சத்ராபதி மானே
எந்தமோடி செய்த போதே! (எந்தன்)

*சரணங்கள்*

1) கும்பமுலேயோ தன பாரம் - மானே
குளுருமுத்து சுடுது இன்நேரம்
சம்போக லீலேயோ அயக்சுரம் - மானே
சகியே பெண்ணரசே என்நேரம் (எந்தன்)

2) மல்லிகை முல்லே மலர்சூடி
வசந்த கோகிலம் என்னப்பாடி
மெல்லியராதி யுடனே யாடி
மகேந்திர போகமே தினமும் நாடி (எந்தன்)

3) சரஸ சல்லாப ரதி மார்பன் - நல்ல
தைரியன் அசனுயினன் குமாரன்
வருசேர் கனகனுயினன் சுதன்
வருதை யேவும் சேனுதிபன் மீதே (எந்தன்)

---

## ராசை முத்துவீரர்மீது பதம்

*இராகம்* : ஆகிரி *தாளம்* : சாபு

*பல்லவி*

ஆசை மிஞ்சுதேதோ - ஐயா!
என்மேல் வாதோ (ஆசை)

*அனுபல்லவி*

1) ராசை வாழ் முத்து வீரேந்திரா!
நகமுக சந்திரா! (ஆசை)

2) நேரம் பெருகுதே நிலவும் வருகுதே
பூசல் வளருதே போகந் தளருதே. (ஆசை)

3) மாலே நேரத்தில் பையச் சந்த்ரோதயமும் வந்து
செந்தழல் தன்னைப் பெய்ய சரங்கள் கோடி (ஆசை)

4) ஆலேவில் வேறு, தினமும் எய்ய நானுமிப்படி
ஆனே யுண்ட கனிபோலே ஆனேன் என்ன செய்ய
(ஆசை)

---

## தளவாய் நரசேந்திரன்மீது பதம்

*இராகம் :* ஆரபி *தாளம் :* ஆதி

*பல்லவி*

வாசலில் வாரானோ! வாய்முத்தந் தாரானோ!
ராசன் தயவாய் நர சந்த்ரனெனேப் பாரானோ
(வாசலில்)

*அனுபல்லவி*

ஆசை வளருதே ஆவி தளருதே
ரோசமோ மனம் துஞ்சுமோ என்மீதில்
பேசுவார்களெதிர் வாசனே பல்லக்கில் (வாசலில்)

*சரணங்கள்*

1) மனது பதறுதே வளேகள் சிதறுதே
கனிவாய் கருங்குயில்கள் கூகூவென கதறுதே
பனினீர் தெளிக்கவே பரிவாய் சுகிக்கவே

**ம. காலம்**

அனகன் வாளி அஞ்ச மனசு லீலே மிஞ்ச
கனிவாய்த் தேனுநுஞ்ச கனக பல்லக்கில்
(வாசலில்)

2) முத்து முத்தாடவே மோகம் பதம் பாடக்
கொத்தலர்கள் கூடி கொஞ்சிக் கொஞ்சிக் கூடவே
மெத்த மன தேகமாய் மெத்தவொரு த்ரேகமாய்

ம. காலம்

மெத்தை மீதில்மன மொத்து மேவிசெய
மெத்த மேவுமத மத்த கசத்தில் (வாசலில்)

3) நாயக ரத்தினம்போல் ஆயர் பரகொங்கை மேல்
ஏயர் மத சாதி யேபெருகு மரபினுல்
காயர் சாதியென்ன கலந்து கலவி பண்ண

ம. காலம்

தூய பாயனென பாயனே மதன
ராய ராயதள வாய்ந்ர சேந்த்ரன் (வாசலில்

## மன்னன் சகஜி மீது பதங்கள்

*இராகம்:* சங்கராபரணம் *தாளம்:* கண்டசாபு

*பல்லவி*

இங்கே வருவானேன் என்னை
அங்கே வரச்சொன்னுல் வாரேனே மெத்த
வங்கணமாய் வந்து மருவேனே; (இங்கே)

*அனுபல்லவி*

இங்கே வருவானேன் ஏசோஜீந்த்ரனருள்
சங்கீத லோலன் ஸ்ரீ சாகேந்திரன் (இங்கே)

*சரணங்கள்*

1) மாரன் கேளிசெய்ய வருவீர் வருவீரென்று
வாரிக் காட்சி அங்கே வழிபார்க்க
யாரு மறியாமல் அர்த்த ராத்திரி அந்த-
காரமும் பாராமல் காதலுடன் (இங்கே)

2) முடிப் பன்னூறு பொன்னும் முத்துமாலையும் கையில்
எடுத்துக் கொண்டிங்கே என்னருகில்
அடிக்கடி நீர்வந்தால் அபசாரம் இல்லாவே
கொடுத்தால் நானேவந்து கூடேனே (இங்கே)

3) ஏக சத்ராதிப ஏகவீர ! நித்தியம்
த்யாக கர்ண ! போக ! தேவேந்திரனே !
ஏக போகமாக என்னைச் சேர வாரும்
வாகனே ! ஸ்ரீசாக மகராஜனே ! (இங்கே)

---

*இராகம்* : சிந்துபைரவி *தாளம்* : ஆதி

*பல்லவி*

என்ன செய்வேன் இந்த மோடி
எந்தன் மீதில் ஏனடி மின்னே ? (என்ன)

*அநுபல்லவி*

கன்னியே உன்னைப் பிரிந்தால்
கணமெனக் கோருக மாகுது. (என்ன)

*சரணங்கள்*

1) நவமோகினி யான் தொடரத் தொடர
நடக்குறாய் உந்தன் மனது கல்லோடி ?
பவழவாய் இதழ்த் தேனே ! ஒருபணத்துக் கொரு
பணிவிடையோ சொல்லடி ? (என்ன)

2) மலரைத் தேடிய வண்டு போலுன்னை
வனிதையான் வலிய வேண்டினால்
முலையின் மேல் என்னைச் சேர்த்தணைத்தொரு
முத்தம் தாராமல் இப்படியானால் (என்ன)

3) வாசுவேன் கவிதையால் மிக மனம் மகிழும்
சோழேந்திரனே ! சாமி போசலகுலதிலக !
சாஹஜி பூப ! வாவென்று
முன்போல் சேராமல் (என்ன)

---

இராகம் : பரசு தாளம் : ஆதி

பல்லவி

இத்தனை மோடி ஏது?
என்மே லிப்போது (இத்தனை)

அனுபல்லவி

சத்துரு சம்ஹார தீர
சகஜி ராஜ கம்பீர (இத்தனை)

சரணங்கள்

1) ஐயா இப்படி ரோசம்
ஆனால் என்ன உல்லாசம்?
மையல் கொள்ளுவதே மோசம்
மன்னர்க்குண்டோ நேசம்? (இத்தனை)

2) என்னிளமை வீணே போமோ?
எவர்க்கும் பெண்ஜன்ம மாமோ?
கன்னியர் ஏச லாமோ?
காதல் பொருக்கப் போமோ? (இத்தனை)

3) அருள்வாசு தேவன் மேலே!
அன்புவைத் தொருநாள் போலே!
வரிசை செய்து மேன்மேலே!
வளர் சாகேந்திர! என் மேலே! (இத்தனை)

---

இராகம் : மத்யமாவதி தாளம் : ஆதி

பல்லவி

அகத்தில் புருஷன் என்றால் மனதுக்கு ஆகாது
என்ன செய்வேன்? தோழி. (அகத்தில்)

அனுபல்லவி

செகத்திலுள்ளோர் புகழ் சகஜி மகாராசன்
சிங்காரலீலை ஒருநாள் கண்டபின் (அகத்தில்)

*சரணம்*

1) ஆனைபோற் கண்டவர் பூனைபோற் பார்ப்பாரோ
அணிமுல்லை கண்டவர் அல்லிப்பூ அணிவாரோ
தேனையருந்திய 'நா' கசப்பைத் தேடுமோ ?

**ம. காலம்**

வானில் ரவியைக் கண்டருங் கமலம்
வஞ்சியே மின்மினியைக் கண்டலருமோ ?
தானே சந்திரனைக் கண்டுருகும் காந்தக்கல்
சந்திரசோதியைக் கண்டுருகுமோ ? (அகத்தில்)

2) சிந்தை கனவிலும் அவனை நாடுது
செங்கை அவனைத் தழுவவே தேடுது
கந்துகக் கொங்கை கச்சிலடங்காது

**ம, காலம்**

செந்தமிழ் அவன்மேல் படித்தாலெனது
செவ்விதழில் தேன் அருவி யூறுது
எந்தனுக்கிசைந்த நாதனவனல்லால்
இந்துமுகி ! என்ன சொன்னாலுமிந்த (அகத்தில்)

3) அனுதினம் வாசுதேவன் கவிதை என்றால்
ஆதரிக்கும் போசலான்வய சேகரன்
கனகவிபூஷணம் வாரணம் சிவிகை

**ம. காலம்**

கவிஞர்க்கருள் கர்ணன் தனபதி எனவே
சாமந்தராசர்கள் சந்ததம் போற்றிய
சகஜி மகாராசன் மனதொருமித்துக்
கலந்தென்னை யணைந்த மன்மத லீலையால்
(அகத்தில்)

இராகம் : பீம்ளாஸ் தாளம் : ஆதி

பல்லவி

உனக்கு இப்போது யான் சொல்லும்
உபசாரமேது ? (உனக்கு)

அனுபல்லவி

அனகன் சாக ராஜனை
அழைத்து வந்து கூட்டின (உனக்கு)

சரணங்கள்

1) இரவும் நூறுயுகமாகி இருவிழி உறங்காமல்
கரிராஜன் அருந்திய கபித்தம் போலே யான்
விரகவேதனை யாலே மெலியும் வேளையில் எந்தன்
பருவம் அவம் போகாமல் பக்ஷம் வைத்து ரக்ஷித்த
(உனக்கு)

2) ஏனுக்ஷி எள்ளளவும் இரக்கமில்லாமல் பஞ்ச
பாணன் யெய்யும் கணைக்கு பரிகாரம் எங்கும்
காணுமல் நான் மெலியும் காலையினில் நீ செய்த
பிராணேபகாரத்துக்கு பிரத்யுபகாரம் உண்டோ ?
(உனக்கு)

3) அந்த மாதுடன் கூடி அணைந்த சகராஜனை
சந்ததம் வாசுதேவன் தமிழினுல் துதித்து,
எந்தவிதமோபேசி இணங்கிஇங்கே அழைத்துவந்து
எந்தனுடன் மருவ கிருபை செய்த. (உனக்கு)

---

இராகம் : சுப பந்துவராளி தாளம் : ஆதி

பல்லவி

மையலே கொண்டேன் தையலே — மதி
பெய்வதெல்லா மெனக்கு வெய்யலே[1] (மையலே)

---

1) பெய்யுதிரவெல்லாம் வெய்யிலே — என்பது மூல பாடம்

*அனுபல்லவி*

அய்யய்யோ காம பையலே — ஏராளம்
எய்யுரான் வாளி மெய்யிலே. (மையலே)

*சரணங்கள்*

1) ஆசை யென்ன பரி யாசமோ? — தூது
பேச உனக்கு ப்ர யாசமோ?;
நேசம் அவள் வீட்டில் வாசமோ? — சாக
ராசன் தனக் கென்மேல் ரோசமோ? (மையலே)

2) மந்த மாருதமும் வந்துதே — மலர்ப்
பந்துமுலை விம்மி குந்துதே;
எந்தன் மோகம்மி குந்துதே — அவன்
விந்தை கண்டு மனம் நொந்துதே (மையலே)

3) தாவி அணைத்து வோடவே — வாசு
தேவன் கவிதைகள் பாடவே;
பாவையே நான்முத் தாடவே — சாக
ராசன் என்னை யின்று கூடவே. (மையலே)

---

*இராகம்:* சாரங்கா *தாளம்:* ஆதி

*பல்லவி*

சாகேந்திரன் வாரானோ
தயவுடன் பாரானோ? (சாகே)

*அனுபல்லவி*

வகையா யென்னைக் கூடி
மனது களி கூருனோ? (சாகே)

*சரணங்கள்*

1 மதியனல் தாருதே வாடையோ வீசுதே
மதியாமல் குயிலென்னை வசைபேசி கூவுதே
[1]இதிகை தாவியே இடை தவமானதே

---

1) இதிகை = பரம்பரையாக வந்த உபதேசம்

ம. காலம்

இதயம் நொந்ததே இதையறிந்ததே
உதவி செய்தபேர்க் கதிசயஞ் சொன்னேன் (சாகே)

2) எவரை அனுப்புவேன் ? ஏதென்று சொல்லுவேன்?
பவமதனன் மாரப் பயல்கென்ன சொல்வேன் ?
நவமதாகிய என் கவிதை பாடியே
தவன மேவியென் கவலை தணியுமோ?

ம. காலம்

— .... .... .. .... .... — — மின்னுள் மாரன்
துயிலாக் கண்ணுபகாரன் — .... — (சாகே)

3) தேசாதிராசர் துதிசெய்யும் பணிபாதன்
மாசிலா தவரிங்கே மகிழுங் குணசரீரன்
வாசுதேவன் மேல் நேசம் வைத்தருள்
போசன் தஞ்சைவாழீசன் கொண்டுபோய். (சாகே)

---

*இராகம்* : நாதநாமகிரியா *தாளம்* : ஆதி

*பல்லவி*

மோடி ஏனையா ? என்மேல்
மோடி ஏனையா ? (மோடி)

*அனுபல்லவி*

மோடி யேனையா என்மேல்
மோகமானேன் சகஜி ராசேந்திர ! (மோடி)

*சரணங்கள்*

*1)* அன்ன வசனங்கள்[1] தடுத்து
ஆசையாய் மடலெடுத்து
உன்னைச் சதமென் றடுத்து
ஊரோம லானேன் விடுத்து (மோடி)

---

1) வசனம் = ஆடை என்றும் பேசாமலிருந்து என்றும், பொருள் கொள்ளலாம்.

2) தந்த மயலோ பெரிதே
சகிக்கக் கூடா தரிதே
மந்த மாருதம் வருதே
மாரவேள் படை பொருதே (மோடி)

3) தீன சரண தாநேசா !
தியாகராசர் கிருபை யாளா ! வீர !
மாநிலம் புகழுல்லாச !
மருவுஞ் சகசி ராச ! (மோடி)

---

இராகம் : வசந்தா தாளம் : ஆதி

*பல்லவி*

இப்படிச் சொன்னல் கூடாதென்று
எப்படிச் சொல்வேன் ? (இப்படி)

*அனுபல்லவி*

அற்புத மன்மத ரூபன்
அளகைவாழ் சாகபூபன் (இப்படி)

*சரணங்கள்*

1) அனுதினம் என்னருகில்
அந்திநேரம் வந்து வந்து
உனது சித்தம் என் பாக்கியம்
உன்மேல் ஆசை மிஞ்சுதென்று (இப்படி)

2) வஞ்சியே ! கேள் இக்கணமே
மனதிரங் காதிருந்தால்
பஞ்சபாணன் என்னைச் செய்யும்
பழியுன்மேல் சுமக்குமென்று (இப்படி)

3) கருணையால் வாசுதேவன்
கவியுகந்த சாகேந்திரன்
இருகையாலும் 'சலாம்' செய்து
என்னைமுன்போல் மருவுமென்று (இப்படி)

---

இராகம் : நாயகி தாளம் : ஆதி

பல்லவி

ரதிசமயத்திலிந்த ராஜஸம் ஆமோடி ? (ரதி)

அனுபல்லவி

மதிவதனன் சாகஜி
மகிபாலன் உன்னைச் சேந்தால் (ரதி)

சரணம்[1]

1) வரிசை தானங்கள் பாடி
வணங்கிப் பாதம் வருடி
வொருவர்க் கொருவர் கொண்டாடி
ஒருமித்து விளையாடி (ரதி)

2) இன்ப மடவார் மனோசன்
பாகசாசன சமாசன்
பாவலர் மகிழும் போசன் வாசு
தேவன் புகழ்ச் சோழேசன். (ரதி)

---

இராகம் : கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

மோடி உனக்கென்னடி
வாடா மதிமுகமானே — கேள் (மோடி)

அனுபல்லவி

மோடி உனக்கென்னடி முத்துமோகினி உன்னை
நாடி வந்த சாக ராசனுடன் (மோடி)

சரணங்கள்

1) பணமென்னடி பெண்ணே பாஷாணம் அவனுடைய
குணமே நமக்கொரு கோடியன்றோ ?
மணமும் மலரும் போலே வலியவந்துனை அவன்
இணங்கினுல் அது மெத்த எண்ணிக்கை சாண்
(மோடி)

---

1) சரணத்திலொன்று முழுமையாக இல்லை.

2) ஆடப்போன தீர்த்தம் அருகில் வந்தாற் போலே
தேடியபொருள் கையில் சிக்கினுப் போலே
கோடித்துகிலிரண்டு கொண்டென் அருகில் வந்தால்
ஓடி அழைத்துவர வாடாமல். (மோடி)

3) இந்திரனெனவரும் ஏகோஜி மகாராஜன்
மைந்தனை சாக மகிபாலன்
அந்தமாகமுன்போல் அணைத்தாலதுவே போதும்
பைந்தொடி நீ செய்த பாக்கியம் காண். (மோடி(

---

*இராகம்* : மோகனம் *தாளம்* : ஆதி

*பல்லவி*

மையல் கொண்டாலும் இப்படி
மனத்தை மிஞ்சலாமோடி (மையல்)

*அனுபல்லவி*

தையலர் மோகனன்
தஞ்சை சகஜி ராசனை நாடி (மையல்)

*சரணங்கள்*

1) மத்தகஜமும் மாவுத்தன்
வார்த்தைக் கடங்குதல் போலே
தத்தையே மோகம் மெத்தவானாலும்
சித்தந் தன்னில் நிறுத்தவேணும் (தையல்)

2) தோகையே கேளடி சொல்ல
சுக விரோதி நானல்ல — ஏக
போகானு ராக மாகிலும்
லோக மறிய லாகு மோடி. (மையல்)

3) வாசுதேவன் கவியிலே மகிழ்
சாகேந்திரன் மீதிலே ஆசை
கொண்டாலும் பூசலே — மாதர்கள்
ஏசுவாரென்ற ரோசமே வேணும். (மையல்)

இராகம் : காபி தாளம் : ஆதி

*பல்லவி*

தருணி! அவன் மீதில் மோடி
சந்ததம் ஆமோடி. (தருணி)

*அநுபல்லவி*

தெரியச் சொன்னால் எந்தன் வார்த்தை
தேனே கேளாயடி மானே. (தருணி)

1) மருவலர் பணியும் சகஜி மகிபன்
உன்னைத் தேடி வந்ததே உந்தன் பாக்யம்
சொன்ன வார்த்தை உத்தாரந்தான் சொல்லாய்
மவுனமேது
சுரதவிதங்களுக்கு ஏற்ற பருவங்காண் இப்போது
(தருணி)

2) காசுபணம் எண்ணாமலே கலந்தபேரனேகம்
காதல் கொண்டவனைத்தேடுங் கன்னியர் அநேகம்
போசனிவன் என்றவனைப் புகழுமிந்த லோகம்
புவியில் பெண் பிறந்தால் பொருந்துவதே யோகம்
(தருணி)

3) அளகை ஏக மகிபாலன் அருளன் குணசீலன்
அநுதினம் வாசுதேவன்மேல் அன்பாம் அநுகூலன்
வளமையாய் முன் என்னைச் சேர்ந்த வரிசை
மதனலீலன்
வந்ததே போதும் சகஜி மகிபாலன்வில் வேலன்.
(தருணி)

---

இராகம் : சிந்துபைரவி தாளம் : திச்ரநடை

*பல்லவி*

என்ன மாய மோகம் கொண்டாய்
இளந்தையே! நீ வீணே! (என்ன)

*அநுபல்லவி*

மன்னர் வணங்கும் சகஜி
மகாராஜன் மீதிலே (என்ன)

*சரணங்கள்*

1) வேலை நேத்திவகை கேள் என்ருல்
வேண்டித் தந்த நகை கேட்கிருய்
மாலைக்கு வேய்முத்து என்ருல் — உடன்
வாய் முத்தம் நீ கேட்கிருய் (என்ன)

2) சொன்ன மணிமாலை கேளென்ருல்
தோளில் மாலை ஏன் கேட்கிருய் ?
வன்ன வெழுத்தைக் கேளென்ருல்
மன்மதக் கலையைக் கேட்கிருய் (என்ன)

3) தரையாளும் சகஜி ராஜனைத்
தழுவிப் பதக்கம் கேளென்ருல்
பரிவாய் வாசுதேவகவி சொன்ன
பதக்கவிகளையே கேட்கின்ருய். (என்ன)

---

*இராகம்* : தோடி *தாளம்* : ஆதி

*பல்லவி*

மானே ! சாகேந்திரன் உன்னைவரச்சொன்ஞன்
(மானே)

*அனுபல்லவி*

ஆனுலும் இந்த மோடி
அனுதினம் ஆகாது (மானே)

*சரணங்கள்*

1) பாவையே குடுக்கச் சொன்ஞன்
பாரடி பொன்ஞேலை
தாவடத்துக் கான முத்து
தந்தான் சரிகைச் சேலை
ஓவிய மிகழிவர்க்கு
உவமை எங்குமில்லை
மேவினல் தெரியும் அவன்
விவிதக் காமலீலை, (மானே)

2) மெத்த மையல் கொண்டு
தூதுவிடும் பெண்கள் கோடி
இத்தலத்தைக் கண்டு
மடலெழுதும் பெண்கள் கோடி
தத்தையே அவனைக் கூட
தவம் செய்வோர் கோடி
மத்தொருவர் போலெண்ணதே
வரச்சொன்னல் நீ வாடி (மானே)

3) நவரஸாலங்காரகாவ்ய
ரசிகன், வைரி பீமன்
ஜவன துரங்க நகுலன்
ஜனரஞ்சன சோமன்
கவி வாசுதேவன் புகழும்
சுன குணபிராமன்
ரவி வம்ச சேகரன் (மானே)
சகஜி ராஜ சார்வ பௌமன்.

---

இராகம் : ஆரபி தாளம் : ஆதி

*பல்லவி*

அபரஞ்சி யென்றொரு மாதாம் — மெத்த
ஆசை உமக்கு அவள் மீதாம் (அபரஞ்சி)

*அனுபல்லவி*

விவரமாய்ச் சொல்லும் ஒளியாமல் இப்போது
வீராதிவீரனே ! சாஹ ராஜேந்திரனே (அபரஞ்சு)

*சரணம்*

1) ஆயிரம் பொன் குறையாமல் கேட்பாளாம்
அரைக்காசு பட்ட பணமும் கூட்டாளாம்
சாயப் புடவை யல்லாது கட்டாளாம்
தானே உமக்கவள் தூது விட்டாளாம் (அபரஞ்சி)

2) திருவாரூர்க் கீழத்தெருவில் வளவாம்
தேவரீர்க்கவள் மெத்த உளவாம்
தருணி முலை இரண்டும் மேரு வளவாம்
சாமி நீர் மருவி வந்ததும் களவாம். (அபரஞ்சி)

3) ஏக மகீபாலன் பாக்ய குமார !
இயல் வாசுதேவன் துதிக்கும் ஒய்யார !
த்யாகாதிராஜர் பதம் தொழும் தீர !
ஸ்ரீசாக ராஜேந்திர சுகுண கம்பீர !! (அபரஞ்சி)

---

*இராகம் : கானடா* *தாளம் : ஆதி*

*பல்லவி*

அறிவேன் எனக்கு ஒருத்தி சொன்னாள்
ஆரையா சொல்லும் அந்த மின்னாள் ? (அறிவேன்)

*அனுபல்லவி*

பிரியேன் என்றென்னுடன் முன்னாள் சொன்ன
பேச் செல்லாம் மறந்தீர் நீரின்னாளிது

**மத்யம காலம்**

குறியேன் நான் சிறியேன் — சொல்
லறியேன் கவடுன்னைப் போல்
மறையோர் நிறை யளகைக்
கிறைவ சாகஜி ராஜ ! (அறிவேன்)

*சரணம்*

1) சாலநிறைக் கமழும் சோலை தன்னில்
சந்திரன் உதித்து வரும் காலை
அந்த ஆலை மொழியாள் அனுகூலை — என்று
அனுபவித்து வருடி லீலை — முத்து

**ம. காலம்**

மாலை நல் வேலை — யாம்
ஓலை பேர்ச் சேலை — ஓர்
வாலை கையில் நேற்று
மாலையில் அனுப்பினது (அறிவேன்)

2) கோதையவள் பொது மாது தானோ !
குடிவழியோ ! சொல்லிப்போது — அவள்
சாதிவசதி பெயரேது ? சொல்லும்
சாமி என்னுடன் என்ன சூது ?

**ம. காலம்**

போதும் போதுமென் மீதில் நீதியோ
வாது நீரேதோ ஓதுறீர் வகைகள்
என்னைத உன் ஜாலங்கள். ★

---

இராகம் : சிவரஞ்சினி தாளம் : ஆதி

*பல்லவி*

முகமறியாது போலே என்மேலே
மோடியேன் மானே ! — முன்பின் (முகம்)

*அனுபல்லவி*

மிஞ்சுதையோ மையல் என்செய்வேன் — நீ
பஞ்சணை மீதினில் இணையாய் (முகம்)

*சரணம்*

1) உத்தரம் ஒன்றை உரைத்திடில் அதனால்
முத்துதிராதடி மொழிகுவாய்
சித்தமிரங்கி இதழ்க்கனியாரமு —
தத்தினில் ஒருதுளி தருவாய். (முகமறி)

---

★ சுவடியில் இப்பாடல் இதற்கு மேல் இல்லை.

2) செந்தமிழ் வாசுதேவன் கவியே சொல்லும்
உந்தனை நாடுது என் மனமே
முந்தி யணைந்தது போல் அணைவாய் சகஜி - வ
சுந்தரனுன அதிபதி நானே. (முகமாறி)

---

**இராகம் : தோடி** **தாளம் : கண்டசாபு**

பல்லவி

வாடி வாய்முத்தந் தாடி — என்மீதில்
மோடி இத்தனை ஏனடி. (வாடி)

அனுபல்லவிகள்

1) தோடி முகாரிகள் பாடி விநோதமாய்க்
கூடி முன்போல் விளையாடி முத்தாடவே. (வாடி)

2) பந்து நிகர்த்த தனந்தனில் சந்த — சு
கந்த பணிந்து மகிழ்ந்து கலந்தனை (வாடி)

3) இந்த வசந்த தினந்தனில் அந்தம
தந்தனு சிந்தலர் வத்திட நொந்தனன் (வாடி)

4) கைக்குள் நெருக்கி வருக்கை சருக்கரை
மிக்க முருக்கிதழ் இக்கண மேதர (வாடி)

5) உத்தது உரைத்தவர் மெத்தையில் வைத்தொரு
முத்து நகையளை நித்தம் அணைந்திட (வாடி)

6) வாசுதேவன் சொல்லும் ஆசுவினுல் மகிழ்
போசல வர சாக ராசன் நானடி மின்னே. (வாடி)

---

இராகம் : சாருகேசி தாளம் : ஆதி

பல்லவி

உமக்கேத்த வகைக்காரி காண் — நாளும் (உமக்கு)

அனுபல்லவி

நமதகில பூதரணி நாத! சகஜீந்த்ர (உமக்கு)

சரணங்கள்

1) தென்காஞ்சி இவள் ஜனன தேசம் — ஜயதீ
தந்த ஜாலர் குந்த கோசம் — இப்போ
கொங்கணேஸ்வரன் தெருவில் வாசம் — நைவ
குவலயே லாவண்யம் க்வாபிதத் ஸத்ருசம் (உமக்கு)

2) இப கும்பம் இவள் தனத்துக் கீடு — தீனிகி
ஈ ஜகதுலோ லேது ஜோடு
அபரஞ்சியாலிழைத்த தோடு — நீகு
ஆகுல மைனதி ஓ அய்ய! நாதோடு (உமக்கு)

3 தினகர ஸஹஸ்ர ஸமதேஜ! — வாஸவ
தேவகவி தினம் துதிக்கும் போஜ
அநக, போஸல ஸிந்து ராஜ — கீர்த்தே
ஏகமகீபனருள் சகஜி ராஜ. (உமக்கு)

---

இராகம் : கரஹரப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

உன்னைத் தேடிப் போனாள்
மின்னாள் நேற்றொருத்தி (உன்னைத்)

அனுபல்லவி

சன்னையாய் உன்விடுதி தன்னில் வந்து வந்து
(உன்னை)

*சரணங்கள்*

1) படுக்கை வீட்டில் வந்தங்கே பார்த்துன்னைக்காணுமல்
திடுக்கிட்டாள் மலரணையிற் சேர்ந்தாள் —
பொருந்தாள்
அடிக்கடி 'அடி'யோசை அதனுல் வழிபார்த்துக்
கடின விரகத்தினுல் காத்துக் கொண்டிருந்து
(உன்னை)

2) பிராணேசன் வந்தானென்று பரிகாசம் சகி செய்ய
நாணி மனம் மகிழ்ந்தாள் நகைத்தாள் பின்
திகைத்தாள்
காணுமல் உன்னை எண்ணி கடும் நெடுமூச்சுடன்
ஆணி மௌக்திக மாலை அடையாளமிதோ வைத்து
(உன்னை)

3) மருவலர் பணிஏக மகாராஜனருள் பால !
சரச வாசுதேவன் சாகித்ய லோல !
தருண ! மன்மதனுன சகஜி ராஜேந்திர !
மருவி முன் உன்னைச் சேர்ந்த வனிதை யார்
தெரியாது. (உன்னை)

---

இராகம்: மோகனகல்யாணி தாளம்: ஆதி

*பல்லவி*

வரச்சொன்னேன் என்று சொல் — மின்னே (வரச்)

*அனுபல்லவி*

துரைசிங்கம் சாகேந்திர
சுவாமியை நான் (வரச்)

*சரணங்கள்*[1]

1) ஓவியமே ! ரதிசுக பரவசத்தில் யான்
உரைத்தது மனத்தில் எண்ணுமல்
காவி மலர்க்கணே மாரன் எய்யாமுன்மை
கால விளம்பம் பண்ணுமல் (வரச்)

2) தேனிலும் வாசுதேவன் மதுரம் பெரு
செந்தமிழே இனிக்குது என்றனே
வானவர் கோன் நிகர் சாகேந்திரனே
வணங்காத கூடாரை வென்றனே (வரச்)

---

இராகம் : சகாணு தாளம் : ஆதி

*பல்லவி*

இப்போவரச் சொல்லடி பிராணேசனே
இப்போவரச் சொல்லடி. (இப்போ)

*அனுபல்லவி*

நல்ல அற்புத ரூபனை
சாகேந்திரனே இங்கே. (இப்போ)

*சரணங்கள்*

1) அந்த மதனன் சேனை தோற்க
எந்தன் உயிரைக் காக்க
எந்தன் வதனம் வேர்க்க
இணங்கி மையல் தீர்க்க
சுந்தரமுலே சேர்க்க
சுரத கேளிக்கைப் பார்க்க (இப்போ)

2) மல்லிகை சுகந்தங்கள் கூட
மதுரமாகவே இசை பாட

---

1) சரணத்திலொன்று முழுமையாக இல்லை,

அல்லி லெந்தனைக் கூட
அமுத நிலைகள் நாட
வில்லியும் பயந் தோட
விசித்திரமாய் விளையாட (இப்போ)

3) சிங்கார மன்மத லீலனை வாசு
தேவ கவீந்த்ரானுகூலனை
மங்கையர் வேலனை
மருவார் பணி காலனை
ஸங்கீத லோலனை
ஸாஹ பூபாலனை (இப்போ)

---

இராகம் : சுருட்டி தாளம் : ஆதி

*பல்லவி*

வரவர என் மையல் பெருகி வளர்ந்தது
மானே நான் என்ன செய்வேனடி ? (வரவர)

*அனுபல்லவி*

ஸ்ரீநிவாஸ செண்டலகாரன்
நம்பி அன்பாய் என்னை
சேர்ந்தணைந்த சுகந்தனை நினைந்து (வரவர)

*சரணங்கள்*

1) என்ன செய்வேன் மதனன் கணைவந்து படபட
இப்படியே எந்தன் மனம் நோமோ
தஞ்சம் எனவே உன்னை நம்பினேன் என்துயர்
சகியே ! உரைத்தழைத்து ஓடி வாடி (வரவர)

2) மருமலரணை மீதில் இருவருமொருமையாய்
மருவி யணைந்த சுகந்தனை நினைந்து
பருதி யெனவே வானில் வருமதியினால் மெத்த
உருகி உருகி உள்ளம் உணரடி — தோழி (வரவர)

3) நால்வேத சாகரன் ராசராச கோபாலன்
நல்கிய குமார கம்பீர தீரன்
மேன்பெருஞ் செண்டலங்காரன் — என்னை
மேவியணைந்த சுகந்தனை நினைந்து (வரவர)

---

இராகம் : சகாணு தாளம் : ஆதி

பல்லவி

கும்பிட்டேன் என்று நீ சொல் — என்
சாமியை நான் (கும்)

அனுபல்லவி

வம்புடன் என்னைச் சேர்ந்த
சுவாமி சாகேந்திரனை நான் (கும்)

சரணங்கள்

1) அன்னமே ! பெண்புத்தியால்
அறியாமலே நான்
என்ன குறை செய்தாலும்
ஏழை நானிருகையாலும் (கும்)

2) மெய்யாய் அவருக்கென்மேல்
விசுவாச மிருந்தாற் போதும்
சாஷ்டாங்கமாய் வணங்கி
தையலே நான் நூறுதரம் (கும்)

3) செந்தமிழ் நிபுணனை
ஸ்ரீவாசுதேவ கவிமேல்
சந்ததம் கருணை செய்யும்
சாகபூபாலனை நான். (கும்)

இராகம் : தோடி தாளம் : ஆதி

பல்லவி

இன்னேரமே அழைத்தோடி வாடி
மின்னரசே நீ ! என் மையல் சொல்லி (இன்னே)

அனுபல்லவி

திரைசொல் வாசகன் ஆன துரைசிங்கம்
சாகேந்திரன் இங்கு வரச்சொன்னான் என்று
(இன்னே)

சரணம்

1) ★கன்னனும் அளகையின்
மன்ன னென்று என்தன் பெயர்
சொன்ன வுடனே அவள்
ஓடி வருவாள் — அவளை (இன்னே)

2) பைந்தொடி அவளிதழ்
அந்தம் வாசுதேவன்
செந்தமிழ் போலே
சிறந்து இருக்கும். (இன்னே)

---

இராகம்: சாருகேசி தாளம் : ஆதி

பல்லவி

வாடி வாதென்னடி — அடி பெண்ணே ! (வாடி)
மோடி என்னடி என்னை முன்பின்னறியாயோ !
(வாடி)

அனுபல்லவி

மெத்த நம்பினன் நானடி — மானே உன்னை
தத்தையே என்னிடம் பராமுகமேனடி
சிததஜன் என்னைத்தேடி ஏவும் மலர்க்கணை கோடி
நித்தியம் எய்யுருன் நிமிஷம் போதாதடி (வாடி)

---

★ இப்பாட்டின் முதல் சரணத்தில் பல சொற்கள் சுவடியில் காணப்படாமையால் பதிப்பிக்க இயலவில்லை.

*சரணங்கள்*

மலரணை தனிலிருந்து கோவையிதழ் அமுதம் தந்து
கலவியில் உவந்து கலைநிலைகள் அறிந்து
குலவியே என்னைச் சேர்ந்து கூடக்கிருபை நினைந்து
(வாடி)

---

*இராகம் :* ஆகிரி *தாளம் :* சாபு

*பல்லவி*

தூதுதான் போன மாது
ஏது தாமத மறியேன் (தூது)

*அனுபல்லவி*

ஸ்ரீதரன் சகஜி ராசேந்திரன்
ஆதரவுடன் வாரானோ? (தூது)

*சரணங்கள்*

1) கன்னியர் முலைமேல் நக
சின்னங் கண்டு கண்டிப்போ
வன்னிமுன் மெழுகு போலே
என்னுளளம் மெலிகுவேனோ! (தூது)

2) ஆசை கொண்ட பேரில்லையோ!
காசினியில் என்னளவே
மாசில்லா மதியும் தழலை
வீசுதென்ன செய்வேன் — மின்னே! (தூது)

3) வஞ்சியே! சகேந்திரன், முன்பு
ரஞ்சிதமா யென்னைக் கூடி
செஞ்சியி லுவந்த முன்னாள்
வஞ்சனைக் குள்ளாகி னேனோ? (தூது)

---

இராகம் : சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

அடிக்கடி மோடி யீதேனோ — என்தன்
யோகமோ முன்னாள் செய்கை தானோ (அடிக்)

அனுபல்லவி

கொடைக்குக் கர்ணன் சகசேந்திரன்
வாரானோ மால் தீரானோ ! (அடிக்)

சரணங்கள்

1) மருவி மறக்கப் போமோ மானே நீ
அழைத்து வராமலே தாமதஞ் செய்யலாமோ ?
பருவ வயதென்ன ஆர்க்குத் திறமோ
போனால் வருமோ. (அடிக்)

2) பாங்கி மதிதழல் பெய்ய பிராணநாதன்
இணைபிரியா மடவார் பரிகாசம் செய்ய
வாங்கி மதனன் வில்லை வளைத்தானெய்ய
யானென்ன செய்ய (அடிக்)

3) வர சகேந்திரன் என்மேலே
வாசுதேவா கவி மீதினில் பக்ஷம் வைத்ததுபோலே
கருணை செய்து மருவானோ முன்போலே
என் மீதிலே (அடிக்கடி)

---

இராகம் : காபி தாளம் : ஆதி

பல்லவி

தூதாய் யான் அனுப்பின மாது தானே — அவன்
மீதில் மோகமாய் மேவினாள் (தூதாய்)

அனுபல்லவி

சீதமதி வேணியர் பாதம் பணி சகஜி
நாதன்முன்னே என்னுட காதல் சொல்லிவாவென்று
(தூதாய்)

1) உள்ளத்தினில் இவள் தானே ப்ராணசகி என்று நான்
உண்மையாகவே நம்பினேன்
வளர்த்தகடா மார்பில் பாய்ந்தது போலவே
வஞ்சனை செய்யுமவள் நெஞ்சம் நான் அறியேன்
(தூ தாய்)

2) வேளையிதுவென்றவள் தாளில் பணிந்து மெத்த
வேண்டியே அனுசரித்தேன்
தோளிலிருந்து மெள்ள செவியைக் கடித்ததுபோல்
தோகையவளிப்படித் துரோகஞ் செய்தவள் மானே!
(தூ தாய்)

3) வாசுதேவன் கவிமேல் நேசம் பிறக்கும் தஞ்சை
வாசன் சகராசன் முன்னே
ஆசைகொண்ட என் சேதி பேசிவரச் சொல்லிநான்
ஆதரித்தனுப்பினுல் ஏதோதான் நினைந்தாள்.
(தூ தாய்)

---

*இராகம்* : கமாசு — *தாளம்* : ஆதி

*பல்லவி*

இல்லை இல்லை என்று இன்னம்
ஏன் மறைக்கிருய்? (இல்லை)

*அனுபல்லவி*

எல்லாம் எனக்கு வெளியாச்சுதுபோடி
கலைவல்லவன் சகஜி மகிபன் உன்னைச் சேர்ந்தால்
(இல்லை)

*சரணங்கள்*

1) தனத்தில் நகரேகை ஏது? — இதழ்
தனிற் பல் குறிவந்த தேது?
மனத்தினில் படபடப்பேது? — இந்த
வஞ்சனை உனக்காகாது (இல்லை)

2) தேனே உன் வதனத்தில் வேர்வை — ஆடு
திருடின கள்ளன் போல் பார்வை
ஆனால் அவனுக்கு நீ ஏர்வை — அவனருகில்
தூதாய் உன்னை அனுப்பியதே தோர்வை. (இல்லை)

3) அதிவிநயம் உனக்குச் சொந்தம் — மெத்த
அதிரக்தம் நயனாரவிந்தம்
சிதறுது ஏதடி கந்தம் ? — வாசு
தேவன் புகழ் சாகேந்த்ரனே அந்தம். (இல்லை)

இராகம்: யமுனாகல்யாணி தாளம்:

*பல்லவி*

மெத்த நாகரிகக் காரிகாண்
சத்திய பாஷா ! அரிச்சந்திரனே ! (மெத்த)

*அனுபல்லவி*

தேகம் பத்தரைமாத்துத் தங்கமாம்
சன்மபூமி ஸ்ரீரங்கமாம்
தோகை முலை நாக ரங்கமாம்
சொன்னேன் உமக்கவள் பங்கமாம் (மெத்த)

*சரணங்கள்*

1) பங்கயம் போலிரு நேத்திரமாம்—அந்தப்
பாவை யிடை நூல் மாத்திரமாம்
சங்கீதத்தில் விருது பாத்திரமாம் —அந்தத்
தருணி மேனகை கோத்திரமாம் (மெந்த)

2) முத்து நகையில் சிங்காரியாம்—அவள்
முன்னும் உமக்கனு சாரியாம்
கத்தூரி குங்கும தாரியாம்—அவள்
கர்நாடக தேச சஞ் சாரியாம் (மெத்த)

3) மங்கையர் மன்மத லீலனே ! —சுவாமி
வாசுதேவ கவி லோலனே !
துங்க ஜனர்க்கனுகூலனே ! — சுவாமி
சோளேந்திர ! சாக பூபனே !

— —

இராகம் : ஸ்ரீகாந்திமதி தாளம் : கண்டசாபு

*பல்லவி*

பேராசை ஒருமின்னுள்
பேசி வரச் சொன்னுள் (பேராசை)

*அனுபல்லவி*

தாராளும் சாகேந்திர
சாமி உன்னுடனே (பேராசை)

*சரணம்*

1) உன் தன் அருகினில் காத்து
உபசாரம் மிகவுரைத்து
சந்தோஷ வேளை பார்த்து
தனதேறலை கொடுத்து (பேராசை)

2) தயவுள்ளவன் நீ என்று
சாமி வர வெதிர்நின்று
மயல்மிக மிஞ்சு தென்று
மயங்குராளின்று (பேராசை)

3) காமினி ஜன மன்மத
கவிவாசுதேவநுத
சாமி நிகர் நீத
சகஜி பூ நாத (பேராசை)

———

இராகம் : கல்யாணி இராகம் : கண்டசாபு

பல்லவி

காதல் மிகவானள் இந்தக் காரிகை (காதல்)

அநுபல்லவி

வேதியர் பரவும் சோழ நாத
சாகேந்திரா ! உன் மீதில் (காதல்)

சரணம்

1) முன்னெரு நாள் நின் பவனம்
மன்னர் கோவிலில் கண்டு
சன்னத்தம் கொண்டவள் போலே
தன்னையுந்தான் அறியாமல் (காதல்)

2) பாரமுலை மேல் சுகந்தம்
ஆரமுந்தான் அணியாமல்
மார வெறி கொண்டென் நேரமும்
ஆரையுங் கண் பாராமல் (காதல்)

3) கொஞ்சி ஒருவர்க் கொருவர்
மிஞ்சியே லீலை தொடுத்து
பஞ்சபாணன் ரதிபோலே
பஞ்சணைமேல் உன்னைக்கூட (காதல்)

4) ஆசை கொண்டேன் என் தன் மின்னை
நேசமாய் மருவவேணும்
வாசுதேவன் புகழும் ராச
ராச வைபவ சாகேந்திரா ! (காதல்)

இராகம் : ஹம்ஸானந்தி தாளம் : ஆதி

*பல்லவி*

மருவாதிருக்கக்கூடாது
இன்னுமவனை (மருவா)

*அனுபல்லவி*

தரணி வம்ச தீபன் சகஜி
ராசேந்திரன் மன்னை (மருவா)

*சரணங்கள்*

1) வாது கூறும் குலமாதர்
தூபசிலேலுறும் சம்மதம்
சாதியார் என்தனை வேருய்த்
தள்ளிவிட்டாலும் சந்தோஷம் (மருவா)

2) துடிக்கும் சேல்விழி மானே
தூறு சொல்வார் சொல்லட்டும்
அடிக்கும் காத்துக் கெல்லாம்
படல்கட்டக் கூடுமோ சொல் (மருவு)

3) சொரிதமிழ் வாசுதேவன்
துதிக்கும் கம்பீர !
நாரியர் மோகன மார !
ஏக நரபதி குமார !

சேரார் வணங்கும் கம்பீர
வாசுதேவன் துதிக்கு மொய்யார !
பேருதீர ! கம்பீர !
சிருங்கார விகார !

இராகம் : பைரவி தாளம் : சாபு

பல்லவி

என்ன செய்வேன் சாகராஜன்
இன்னும் வரக்காணேன் யான் (என்ன)

அனுபல்லவி

1) ஏராள மான மின்னர்
எனக்காக காத்ததுபோல்
யாராலும் அவர்க்கென்
ஆசை தெரியச் சொன்னல்

வாராரோ வந்தென் மோகம்
தீராரோ என்மேல் தயவு
பாராரோ கேளடி மானே ! (என்ன)

2) வாசமுலாவும் புஷ்ப
வகை பொருந்தாது
வாடை பூசினலும்
வடவை போலெண்ணி

கூசுதே எந்தன் மேனி
ஏசுதே எந்தன் மனம்
பேசுதே நா வெளிமை கேளடி மானே ! (என்ன)

3) வாடா மதி வதன
வாசுதேவன் துதிக்கும்
சோடாக சாகேந்திரன்
சேராதே என் மனது

வாடுமோ அவன் லீலையைத்
தேடுமோ தழுவிப் பிரியக்
கூடுமோ கேளமானேடி! (என்ன)

இராகம் : கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

சும்மா என்மேலென்ன வன்மமோ ?
இல்லாத்தூறு சொல்வதுனக்கு தன்மமோ ? (சும்மா)

அனுபல்லவி

சம்மதன் சாகேந்திரன் என்னைச் சேரச் சொல்ல
தையலே உனக்கு ஏன் பயந்தானோ ? (சும்மா)

சரணங்கள்

1) குறியேது இதழிலென்று
குறியாதடி — மானே
கொவ்வை யென்று
கைக்கிளி கொத்திதடி (சும்மா)

2) இருகண் சிவந்ததேதென்று
எண்ணாதே மானே !
இந்நேரம் சுனையில்
யான் விளையாடினேன். (சும்மா)

3) சரிவானேன் குழலென்று
சங்கியாதடி மானே
தண்மலர்க்காய்வண்டு
கலைத்ததடி (சும்மா)

4) அழிவானேன் நுதல் பொட்
டென்றுதே மானே
அதிவேக நடையில்
வேர்த் தழிந்ததடி (சும்மா)

5) குரல் நெரிந்தது கண்டு
கூறுதே — மானே
குளிர் தமிழ் வாசுதேவன்
பதம்படித்தேனடி. (சும்மா)

*ராகம் :* அடாணு *தாளம் :* ஆதி

*பல்லவி*

நில்லடி சொல்லடி வல்லடிக்காரி (நில்லடி)

*அனுபல்லவி*

மெல்லடி பூவடி முலே
வல்லடி என்னுசை வச
மல்லடி இருகவணைத்துப்
புல்லடி நீ — பெண்ணரசே ! (நில்லடி)

*சரணங்கள்*

1) ஆரடி உனக்கு நிகர்
பாரடி என்மேல் கருணைத்
தீரடி மதன வாதை
சேரடி மனங் களிக்க (நில்லடி)

2) தேனடி உன்மொழி கண்கள்
மானடி சித்தமிரங்காதது
ஏதடி உன்னை நம்பினன்
நானடி தயை நினைந்து. (நில்லடி)

3) பூசவோ கொங்கை மேல் கந்தம்
வீசவோ கவரி சற்றும்
பேசநின் காமலெண்மூன்
மோசமே செய்தால் என் செய்வேன் ? (நில்லடி)

4) வாசுதேவ கவி மீதில்
நேசமே புரக்கும் சோழ
தேச மகா ராஜ
சாக ராஜனை நாடி (நில்லடி)

இராகம் : தேஷ் | தாளம் : ஆதி

பல்லவி

கண்டு மையல் கொண்டவன் நானடி — உன்னைக்
(கண்டு)

அனுபல்லவி

உண்டில்லை யென்னு மிடையும்
அண்டரமுத ரிதழும்
வண்டு நேர் விழியும் — மலர்ச்
செண்டு நேரிரு தனமும் (கண்டு)

சரணங்கள்

1) சித்தஜன் மலர்க் கணைகள்
மெத்தவும் வருத்து தின்னும்
சித்தம் இரங்காமல் — என்மேல்
எத்தனை ராஜஸம் ? உன்னைக் (கண்டு)

2) பஞ்சபாணனுடன் பல
வஞ்சியர் மகிழ என்னிடம்
வஞ்சம் செய்யும் வகையும்
கொஞ்சுகிளி வசனமும் (கண்டு)

3) ஓதிம[1] நடையுடனே
ஆதரவாகிய சகி
மாதருடன் அன்று
வீதியில் வரும்போதுன்னை (கண்டு)

4) வாசுதேவன் புகழ் சகஜி
ராசன் பணி குடந்தை
வாசன் ஆதி பயில் கும்
பேசன் தானடி யுன்னை (கண்டு)

1) ஓதிமம் = அன்னம்

இராகம் : வசந்தா　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

அதட்டி பார்க்கிறீர் ஏது
அந்தவகை இங்கு செல்லாது.　　　　　(அதட்டி)

அனுபல்லவி

மதன ரூப ! தஞ்சை வாழும்
சாக பூப ! என்னை　　　　　(அதட்டி)

சரணங்கள்

1) ஒருக்காலே தானே மீண்டோ ?
உழக்கில் கிழக்கு மேற்குண்டோ ?
சேர்கிறீர் எனது ஏழ்மையைக் கண்டோ ?
தேவரீர்க் கென்ன நான் பெண்டோ ? (அதட்டி)

2) ஆசையானால் நாளைவந்து புல்லும்
அய்யா இன்றைக்குக் கூடாது செல்லும்
ராசா நீரானால் மட்டிலே நில்லும்
நான் பயப்படுவேனே சொல்லும்　　　　　(அதட்டி)

3) கற்ற பேருக் கெல்லாம் சகாயா
கவி வாசுதேவன் மீது நேயா
ஏக ராசன் ஜயஸ்ரீ சாக
ராசேந்திரனே ! துரைராயா !　　　　　(அதட்டி)

---

இராகம் : ஷண்முகப்ரியா　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

தொடவேண்டாம் ஐயா — குடிவழிக்
கடவல்ல மெய்யா.　　　　　(தொடவேண்டாம்)

*அனுபல்லவி*

தொடவேண்டாம் இதுவெல்லாம்
குடிவழிக் கடவல்ல
துரையாஞ் சகசி ராசா
சொன்னேன் சொன்னேன் — என்னை
(தொடவேண்டாம்)

*சரணங்கள்*

1) கொண்ட புருஷனிது
கண்டா லென்னை வெறுப்பன்
மண்டலேந்திர ! உன்னைத்
தண்டனிடுறே னென்னைத் (தொட)

2) காலில் வந்தழியாமல்
கோலின அபிமானம்
வேலிப் பயிரழித்தால்
விளையுமா றெப்படி ? (தொட)

3) ஆரூர ரருளாலே
சீரூர் சகசி ராசா !
மேருமுலை மேலிப்போ
சேருமினிமேலென்னைத் (தொட)

---

*இராகம் :* ரீதிகௌளை *தாளம் :* ஆதி

*பல்லவி*

சுருசம் கண்டே உளவு தெரியாமல்
மயங்குகிறீர் மருவிப் பாரும் நீர் — போமையா.
(சுருசம்)

*அனுபல்லவி*

பருவம் வந்தாலுமென்ன ?
புருஷன் மனமறிந்து
சருவி மேவவே அறியாள். (சுருசம்)

*சரணங்கள்*

1) கொங்கை எழுந்தா லென்ன ? சாமி
இங்கிதம் தெரியாது
எங்கே போராள் சொல்லையா ? (சுருசம்)

2) என்னைச் சேர்ந்த நீரந்த
மின்னை ஒருநாள் சேர்ந்தால்
பின்னை என் வல்லமை தோணும் (சுருசம்)

3) வாசுதேவன் மேல் விசு
வாசம் வைத்து ரக்ஷிக்கும்
போச ! சகஜி ராஜேந்திர !
போக தேவேந்திர ! (சுருசம்)

---

*இராகம் :* ஸாவேரி *தாளம் :* ஆதி

*பல்லவி*

சமுகம் கண்டேனே — சுவாமி
பாக்யசாலி நான் தானே. (சமுகம்)

*அனுபல்லவி*

சமுகம் காண வந்து சகல பூபாலரும்
அமரேந்திரரென்று போற்றும் ஐயா!
சகஜேந்திரா உன் (சமுகம்)

*சரணங்கள்*

1) பூமி கற்பக ! புண்ய புருஷ சேகர
உந்தன் சமுகம் சாமான்யமன்றே !
மாமதி நிகராமோ வதனம் கண்டபோதே
நானும் பூர்வ ஜன்மத்தில் அதிக சுகிருதஞ்
செய்தேனே. (சமுகம்)

2) சந்ததம் உன்னுடைய சபையில் அதிசயமும்
இந்த வைபவமும் எவர்க்கும் எளிதோ !
சிந்தை மகிழ்ந்தேன் என் சென்மம் சபலமாச்சு
எந்தன் பங்குக்கொரு இஷ்டதேவதையாமோ !
(சமுகம்)

3) தஞ்சாபுராதிப சகல குணேந்நத
விஞ்சு சோளேச விதரண சூர
வஞ்சியர் மன்மத வாசுதேவ கவி
செஞ்சொல்லால் மகிழும் ஸ்ரீ சாகபூப — உன்
(சமுகம்)

---

இராகம் : காபி தாளம் : ஆதி

*பல்லவி*

நயமாய்ப் பேசுநீர் ! அநுகூல மிங்கே
நடவாது போம் போம் — இந்த ஜாலம். (நயமாய்)

*அனுபல்லவி*

ஜய விக்ரமார்க்க ரணசூர ராஜ
சேகர சகஜி ராஜ கெம்பீர ! (நயமாய்)

*சரணங்கள்*

1) வீணே சம்மதிப்பாரோ யாரும் — இங்கே
வேறே பெண்களுண்டானல் பாரும்
மாணிக்க மோதிரத்தைத் தாரும் — வளவில்
மனது சம்மதமானல் வாரும். (நயமாய்)

2) வங்கணமெல்லாம் அங்கேயாச்சு — சுவாமி
இங்கே வந்து வந்து பேசுவது மேல் பூச்சு
எங்கே படித்தீரிந்தப் பேச்சு — போதுமி
ரங்கினது வரையி லேச்சு. (நயமாய்)

3) செந்தமிழ் வாணர்க்கு உபகார ! — வாசு
தேவன் மேலன்பு வைத்த தீர !
அந்தமாய் என்னை முன்பேகல் சேர
வாருமையா சாகராஜ ! ஒய்யார !

இராகம் : காபி                                  தாளம் : ஆதி

பல்லவி

ஐயா ! சாமி ! நீ வாடா—என்னை
அணைத்து முத்து முத்தாட                    (ஐயா)

அநுபல்லவி

வையம் புகழும் சாகேந்திர !
போக போகேந்திர !!                    (ஐயா)

சரணங்கள்

1) கன்னல் வேல்சேனை வெல்லுதே
கனகமுலை மெத்த விம்முதே
பன்னீரும் வென்னீர் ஆகுதே
பாவையென் அகம் நோகுதே.                    (ஐயா)

2) சித்தம் உன்னை நாடுது
தேகம் உருகி வாடுது
நித்திரை ஆகாரம் தேடாது
ஆசை பொல்லாது                    (ஐயா)

3) வன்மம் என்மீதி லாமோ ?
மருவி மறக்கப் போமோ ?
முன்போலே என்னை நீர் சேரும்
இதழ் இப்போது தாரும்.                    (ஐயா)

4) தோகைய ராசை மன்மத !
துய்ய வாசுதேவ நுத !
ஏக ராஜேந்திரனின் பால !
சகஜி பூபரிபால !!                    (ஐயா)

இராகம் : கமாசு தாளம் : ஆதி

பல்லவி

ஒருநாழி யிங்கே நில்லடா—எனக்கு
உன்மேல் ஆசை வசமல்லடா. (ஒரு நாழிகை)

அனுபல்லவி

திருமாது வளர் தஞ்சை
அரசாளும் சாகேந்திர ! (ஒரு நாழிகை)

சரணங்கள்

1) ஒருநாழி மகிழ்ந்து விளையாடவே—என்
வாஞ்சை பதருது உன்னைக்கூடவே
விருது பேசியே காமவேளெனைக் கண்டு—பூ
வாளி சொரிகிருன் மலர்மேனி வாடவே.
(ஒரு நாழிகை)

2) தனமுன் கைகண்டு மெத்த வீருதே—உன்னைத்
தழுவியணைக்க என்கை தேருதே
அனகன் ரதிபோல் கூடி ஆசைதணியவே -என்
மனதுமிகத் தீவிரம் கூவுதே. (ஒரு நாழிகை)

3) ராஜாதிராஜர் பணி பாதனே! — சோழ
ராசியம் செங்கோல் நடத்தும் நீதனே!
நேசம் மிகுந்த கவிவாசு தேவனே! — புகழும்
ஸ்ரீசாக ராஜ மகாராஜனே! (ஒரு நாழிகை)

---

இராகம் : யமுன கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

எந்தன் பூஜாபலமும் என்வித்யா ப்ராபல்யமும்
இப்போ சபல மாச்சையா. (எந்தன்)

*அனுபல்லவி*

சந்திரவதன! சூர்யவம்ச தீபக!
சகஜி மகிபால; ஸங்கீத லோல! (எந்தன்)

*சரணங்கள்*

1) மதிகண்ட குமுதம்போல் ரவிகண்ட வாரிஜம்போல்
வாரிதம்கண்ட மயில்போல் நிதிகண்ட
யாசகன்போல்
இதயமும் சந்தோஷிக்க நேத்ரோத்ஸவமாய்
உன்னைப்
பார்த்தேன் இப்போ சுதினம் சுதினம். (எந்தன்)

2) மின்னைக்கண்ட கேதகிபோல் பொன்னில்கண்ட
ரத்தினம்போல்
வெண்மழைகண்ட பயிர்போல் உன்னைக் கண்ணாரக்
கண்டேன்
முன்னாள் நான்செய்த பாக்யம் உயிர்க்குமிதே
ஸ்தோத்ரம்
உன்கிருபைக்கு நான்பாத்ரம்—ஸ்வாமி. (எந்தன்)

3) பத்திலே பதினொன்றாய்ப் பாராமல் என்மீதில்
பட்சம் வைத்து ரக்ஷிஐயா!
ஸத்ய வாசக! வாசுதேவகவி விநுத
ஸஹஜி மகாராஜ! ஸாகித்ய போஜ! (எந்தன்)

---

*இராகம் : சக்ரவாகம்* *தாளம் : ஆதி*

*பல்லவி*

சந்திரமுகி! உந்தன் மனதிப்போ
சந்தோஷமானதே போதும். (சந்திர)

*அனுபல்லவி*

செந்தமிழ் கருள்மணி சாகேந்திரன் உன்மேல்
வைதத சினேகம் மறவான் காண் எப்போதும்.
(சந்திர)

*சரணங்கள்*

1) குங்குமமும் திவ்ய சந்தனமும் தரித்தால்
கொங்கை இனி கொப்புளியாதே.
திங்களுடன் வீசு தென்றல் வாடையுமினி
செந்தழலை மொண்டு இறையாதே. (சந்திர)

2) அந்தரத்தில் பெண்கள் ஏசும் வார்த்தைகட்
கெல்லாம்
உத்தரமினி சொல்ல லாச்சே
அந்தமாம் உன்கைக்கு வளையாகிய மோதிரம்
அங்குயிலில் தரிக்கலாச்சே. (சத்திர)

3) இந்துரவிகள் பேதம் தோன்றுதாகையால்
பகலிது இரவென்று நீயறிவாயே!
நந்தமிழ் வாசுதேவன் புகழ் சாகேந்திரன்
நாடிவந்துனை யணைத்தானே.
—தத்தையே கேள் ஆனாலும் அவனைச் சேர்வது
முன்னாள்
தவப்பயன் காணடி மானே!

---

*இராகம்* : **இந்தோளம்** *தாளம்* : **ஆதி**

*பல்லவி*

கிள்ளை செகித்தது மின்னே!
அன்பாய் வளர்த்த (கிள்ளை)

*அனுபல்லவி*

வள்ளலெனுஞ் சாகேந்திரன்
மன்னன் செய்த குறியல்ல. (கிள்ளை)

*சரணங்கள்*

1) ஆன பஞ்சணைமேல் படுத்தேன் மிகவும்நான்
ஆதரவாக எடுத்தேன்.
கும்ப முலைமேல் மிடுத்தேன்—கொஞ்சினேன்
மார்பில் கிடந்தேன். (கிள்ளை)

2) காவலரை அரைக்கண்ணுற் காணும் ஆசையினாலே
கலங்கி என்மனது நாண
கோவை இதழில் குறிதோண—மனம்
கொதித்து வசையும் பூண. (கிள்ளை)

3) சந்ததமும் உயர்கரமீதில் அன்பாய் வணங்கும்
சாகேந்திர ஸ்வாமிக்கு இப்போது
எந்தனைச் சேர்ந்தாப்போற்—சூது
நல்லாருஞ் சொல்லுறீரேது. (கிள்ளை)

---

*ராகம்: சகானு* தாளம்: ஆதி

*பல்லவி*

மின்னார்கள் மதனன் அளகை மேவும்
சாகேந்திரன் முன்னுன்னுசை சொல்லிவர (மின்)

*அனுபல்லவி*

கன்னியா ரத்தினம் தன்னைக்
காணிக்கையாய்க் கொண்டு. (மின்னார்)

*சரணங்கள்* *

1) கட்டியத்தொனி முழங்கக் கவிவாணர் கொண்டாட
நட்டணையுடன் மடந்தையர் நடனம்புரிய
மட்டுலாவும் ஸங்கீத வாத்தியம் முழங்கும் சபையில்
கிட்டி யானுரைத்துமவன் கேட்பதெப்படியோ?
(மின்னார்)

---

* முதலாம் சரணம் முழுமையாக இல்லை

2) வாகன் அளகை வேந்தன் வாசுதேவன் துதிக்கும்
நாகரிகறும் சகஜி நரபதீந்திரன்
போகமாய் முயன்றுன்னை யிணங்கி அனுபவித்துன்
காகதாளிய நியாயம் காணடி மானே! (மின்னூர்)

---

இராகம் : பிலஹரி தாளம் : ஆதி

பல்லவி

அளகனைச் கோதிமுடியச் சொல்வ தென்னடி?
—அணங்கே நீ
(அளகனை)

அனுபல்லவி

நளின மாதுவளர் அளகை
நாதன் சகஜி ராசனை (அளகனை)

சரணங்கள்

1) துரை என்று அறியாயோடி
துணிந்து சொன்ன தெப்படி?
முறைசெய்த பணிவிடை புரிந்திட
ஊழியப் பெண்கள் இல்லையோடி? (அளகனை)

2) போசல வம்ச தீபன்
பூலோக தேவேந்திரனை
வாசுதேவன் கவிதையில்
கிருபை வைத்த சகஜிமன்னனை—நீ. (அளகனை)

---

இராகம் : ஆகிர்பைரவ் தாளம் : ஆதி

பல்லவி

மங்கைப் பருவ வஞ்சிகாண்—சாமி இவள்.
(மங்கை)

*அனுபல்லவி*

இங்கித குணசீல! ஏகராஜேந்திரன் பால!
சங்கீத ரஸலோல! சகஜி ராஜ பூபால!!

(மங்கை)

*சரணங்கள்*

1) கார்நேரழக! நீ கண்டு—இவள்
கனிவாயதரம் கல்கண்டு
மார்முலை பூச் செண்டு
வயது பன்னிரண்டு
அரியணையாள் திரண்டு
அஞ்சாறு மாதமுண்டு (மங்கை)

2) தண்மலர் போலே சரீரம்—நல்ல
சங்கீத சாத்திர வியாபாரம்
வண்மை ஆலிலைபோ லுதரம்
வசதி விசயா புரம்
புனை சொல்லேன் எந்நேரம்—
உன் மீதிலாசைய பாரம். (மங்கை)

3) செஞ்சொல் வாணர்க்காதார! — என்னுளும்
சோழதேச பாலனசதுர!
வஞ்சியர் மதனுகார!
வாசுதேவ வுபகார!
தஞ்சாபுரீஸ் வர!
சகஜி ராஜ சேகர! (மங்கை)

---

இராகம் : ஆபோகி                    தாளம் : ஆதி

*பல்லவி*

இந்த வேளைக்குப் போமையா—சாமி (இந்த)

அனுபல்லவி

அந்தி நேரம் வந்தென்னை
அணையுமையா — சாமி. (இந்த)

சரணங்கள்

1) ஆடல் பாடலில் மிக்க அந்த காரிகை யென்றுன்னை
நாடிவந்தனன் என்று நடுப்பகலில்
ஆடைநெகிழ்க்க வேண்டாம் அபிமானங் காத்திடில்
கோடி புண்ணியம் உம்மைக் கும்பிடுரேன்—சாமி
(இந்த)

2) விந்தையா இக்கணத்தில் வெள்ளங்கொண்டு
போருப் போலே
இந்தத் தீவிரம் உமக்கு ஏதுக்குத்தான் ? — சாமி
பந்தமோ என்னுடன் பரத்தையாகிலும் மத்த
பைந்தொடி போலல்ல பயப்படுவேன் நான்.
(இந்த)

3) கடினம் செய்வதேது கன்னியோ இரவில்வந்து
அடியேன் பிரமானிக்கம் அறியுமையா.
வடிதமிழாகரன் வாசுதேவன் புகழ்
மடவார் மோகன சாஹமகாராசனே. (இந்த)

---

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

பல்லவி

பதரவேண்டாம் சொன்னேன்
பாங்கி நீ கேளாய். (பதர)

அனுபல்லவி

விதுமுகன் சாகேந்திரன்
வேண்டித்தானே வருவான். (பதர)

சரணங்கள்

1) வாசமலரை நாடி
வரும் 'அளி' போலே
வலிய உந்தனைத் தேடி
வரத்து முன்னாலே. (பதா)

2) தரியா மோகமானாலும்
தன்னை மிஞ்சாதே
தெரிய வேணும் பாங்கி—பூ
தரத்துக் கஞ்சாதே. (பதா)

3) தமிழ் வாசுதேவன் புகழ்
சாகேந்திரன் தானே!
தழுவிமுன்போல் முத்தாட
வருவான்காண் தேனே! (பதா)

---

இராகம் : யமுனா கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

மாட்டோமென்றதேயடி—மின்னே. (மாட்டோ

அனுபல்லவி

தாட்டிகன் தஞ்சை வாழும்
சகஜிராஜன் அழைத்தால். (மாட்டோ)

சரணங்கள்

1) அருமை அவன் சமட்சம்
அடைவதேகோடி லட்சம்
தருணியே அவன் பட்சம்
தானே! கற்பக விருட்சம். (மாட்டோ)

2) அண்டையில் வந்தபோதே
அசட்டையாக வெண்ணாதே
மண்டலேசுவரன் மீதே
வலிமை செல்லுமோ மாதே. (மாட்டோ)

3) வாசுதேவ னென்றும் மகிழும்
சாகேந்திர னின்று
ஆசையுடன் வாவென்று
அணைந்ததே மிகநன்று. (மாட்டோ)

---

இராகம் : ஆரபி தாளம் : ஆதி

*பல்லவி*

பொதுமாத ராசை நிசமென்று
நம்பப் போகாது காண். (பொது)

*அனுபல்லவி*

ததி அளந்துண்ட கண்ணன்
நிகர் தஞ்சையில் சகஜி
மகா ராஜேந்திரா ! (பொது)

*சரணங்கள்*

மஞ்சள் வாடையினால்
அங்கம் மினுக்குவள்
மாரில் தனம்காண்பித்து உடனே மறைப்பள்
தஞ்சம் நீ என்மீதில் தயவுபாரென்பள்
சாமி நான் ஏழை என்பள்
கொஞ்சமல்ல உன்மேலெனக்கு மாலென்பள்
கோபால சக்கரப்பொன் கையில் காணவிட்டால்
வஞ்சித்தேனென்று போய் வாருமென்று
வழிவிட்டு* அகத்திருப்பள். (பொது)

---

* இதன் பின்னுள்ள சரணங்கள் முழுதுமில்லை.

ராகம் : பைரவி தாளம் : ஆதி

பல்லவி

நேசமில்லாத பெண்மேல்
ஆசை கொள்வதே மோசம். (நேசமில்)

அனுபல்லவி

வீசுபுகழ் சகஜிராஜ!
போசல சந்திர! (நேசமில்)

சரணங்கள்

1) சித்தமிரண்டும் ஒரு
மித்தல் அல்லாமல்—வகை
மெத்த செய்தாலும் அங்கே
விரசம்தானே விளையும்?
சித்திர பொம்மையுடன்
சிருங்காரலீலை விதம்
எத்தனை செய்தாலும்—தான்
ரக்தி காணுமோ சாமி. (நேசமில்)

2) மையாரும் விழியார்தன்
மனதறியாத யோகம்
சையோக மல்லவென்று
தமிழ்வள்ளுவர் சொல்லினர்
ஒய்யாரமாகிய நல்
லுருவமிருந்தா லென்ன
அய்யா! பொன்னின் மலர்
அணிந்தது நியாயமாகும். (நேசமில்)

3) தேனும்வேம்பும் கலந்தால்
தித்திப்பாகுமோ—முன்னாள்
ஆணை கண்ட கதைபோல்
ஆனலன்றோ புணர்ச்சி

பானில மெல்லாம் புகழ்
வாசுதேவன் துதிக்கும்
நாளுகலா பிரவீண!
நாத! சாகரூப!! (நேசமில்)

---

இராகம்: பூபாளம் தாளம்: ஜம்பை

பல்லவி

சுப்ரபாதம்! சுப்ரபாதம்! சகஜிராஜனே! (சுப்ர)

அனுபல்லவி

சுப்ரபாதம் சுப்ரபாதம்
சுகவிபோஜனே!
சுப்ரபாதம் சுப்ரபாதம்
போசலேசனே! (சுப்ர)

சரணங்கள்

1) இந்திர திக்கில் அருண காந்திகள்
இயலுடன் விஸ்தாரமாச்சு
விந்தைசேர் அரவிந்த வாசனை
வீசுது இப்போது
அந்தமாய் உபவனங்கள் தோறும்
[1] சகுந்தசாதிகள் ஒலிமுழங்குது
சுந்தரானனே திருவனந்தலோ!
சுவாமி போசலேசனே! (சுப்ரபாதம்)

2) அள்ளிருள் மெல்ல நீங்குது
அந்தணர்முறை மறையிலங்குது
துள்ளி வண்டுகள் குமுதமலர்ச்
சோலை மேவுது

---

1) சகுந்தம் பறவை

தெள்ளுதமிழ்க் கவிவாணர்
வேதியர் ராசாக்கள் சேருரார்
எள்ளுவிழ இடமில்லே உன்நகர்
இவர்கட்கு அருள்செய்ய. (சுப்ரபாதம்)

3) பாடகர் தேசாதியுடன் பூ—
பாள, தேவகாந்தாரி முழங்குரார்
கூடியே வாசுதேவ
கவிபதம் பாடுரூர்
மடவார், நெடும்புகழ்சேர் சகஜி
ராஜனே! நித்யசோபனம் தேவர்க்கு
வேடிக்கை யதேச்சையா தானத்து
வேளேயிது சுதினம்.

---

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

*பல்லவி*

தப்பியோடிப் போங்கள்—முகலரே
தப்பியோடிப் போங்கள். (தப்பி)

*அனுபல்லவி*

தப்பியோடிப் போங்கள் தரியலர் பணிபாதன்
தப்புரை யுரையாத சகஜிராஜன் வாரான். (தப்பி)

*சரணங்கள்*

1) சுத்தி சுத்தி யிங்கே சுழலவேண்டாம் சொன்னேன்
புத்தியல்ல ஓடிப்போனுல் உயிர்பிழைக்கும்
சுத்தன் ஏகராஜன் புத்திரன் சகஜி ராஜன்
கத்தி கொண்டால் கையில் கத்திக் கிறையிடுவான்.
(தப்பி)

2) மட்டிப்புத்தியாலே மடியவேண்டாம் சொன்னேன்
பட்டநாமந்தாதப் பயலாய்ப் பிழைக்கலாகும்
துட்ட நிக்ரகசீலன் சிட்டன் சகஜி ராஜன்
கிட்ட வந்தால்தலை வெட்டிக் குவிக்கப் போருன்.
(தப்பி)

3) ஒட்டுச் சலிகை[1] சொல்லி உயிர் தோற்கவேண்டாம்
குட்டிச் சுவர்கள் தேடிக் குனிந்து பதுங்கலாகும்
மட்டுலாவுஞ் சாக மகிபன் கண்டால் பின்னை
வெட்டிக் கழுகுக்கெல்லாம் விருந்து போடப்
போருன். (தப்பி)

4) கோலாகலங்கள் வேண்டாம் குதிரையேற
வேண்டாம்
நாலுவழியும் ஓடி நரிபோல் பதுங்கலாகும்
மாலுக்கிணையாம் சாக மகிபன் கண்டால் பின்னைக்
காலில் பணிந்து புல்லைக் கவ்வ வேண்டும்
சொன்னேன். (தப்பி)

5) வெள்ளை கட்டவேண்டாம் மீசை முறுக்கவேண்டாம்
கள்ளத் தனங்கள் செய்து துள்ளித்
திரியவேண்டாம்
வள்ளல் சகஜி ராஜன் வாகினி வருமுன்னே
மெள்ளத் தள்ளியொரு கள்ளிக்காடு தேடி. (தப்பி)

6) மல்லொத்த திண்புயன் வாசுதேவ கவி
சொல்லுக்குகந்தருள் சுகுணன் சாகேந்திரன் தன்
வில்லுக்கிலக்காகி வீணே மடிய வேண்டாம்
டில்லிக்கு வழிதேடி திரும்பிப் பாராமலே. (தப்பி)

---

(1) சலிகை = அதிகாரம், செல்வாக்கு.

## (அந்தாதிப் பாடல்களாக)

*தமிழ் மகள் :*

ஆதிநாள்முதல் என்னை
அணைந்த சாகேந்திரனை
தூதுவிட் டழைத்தது
துணிவோ வடுகச்சி?

*தெலுங்கு மகள் :*

வடுகச்சியனி
செப்புதாவு அரவதாந
படுசுநிம்மனி நீதோ
பலுகக வொச்சிநி?

*தமிழ் மகள் :*

வச்சினு வென்று
வழக்கும் கணக்கும் சொல்லி
மிச்சமாய்ப் பேசுர
விதமென்ன சொல்லடி.

*தெலுங்கு மகள் :*

அடியடியனி
ஆடேவேமே ஓ சிந்நதி
வீதிலே இதி
நியாயமு காதே.

*தமிழ் மகள் :*

நியாயமு இரு கொங்கை
நீ என் சாமிமுன்—உ
பாயமாய்க் காண்பித்தது
உசிதமல்ல வோ,

தெலுங்கு மகள் :

உசிதமனி நாதோ
உதுடுகா எதிரிஞ்சி
வச்சி மாடலாட
வச்சுனு நீகு!

தமிழ் மகள் :

நீகு நீகென்றிங்கே
நீலித்தனம் செலுத்தப்
போகாது உந்தனுக்கு இது
புத்தியல்ல வோடி.

தெலுங்கு மகள் :

புத்திகானே மனமு
இத்ரமு ஏகமை
முத்துகானுந்தாமு
முதிதரோ ராவே.

தமிழ் மகள் :

வாடி சத்யபாமை
உருக்குமணி போலே
கூடிமாடி அனு
கூலமாய் மகிழ்வோம்.

தெலுங்கு மகள் :

வாஹரே! வந்திதுடௌ
வாசுதேவ நுத
சாஹராஜுநி சேரி
ஸததமு உந்தாமே.

இராகம் : கேதாரகௌளை — தாளம் : ஆதி

பல்லவி

தயவாய் எந்தனைக் கையால்
தழுவியது அறிவேன். (தயவாய்)

அனுபல்லவி

செயசீலன் சாகேந்திரன் பின்
செய்ததேதோ அறியேன். (தயவாய்)

சரணங்கள்

1) குலவியே அவன் வந்தென்
கொங்கை தொட்டதறிவேன்
பலவித நகரேகை
பதித்த மார்க்க மறியேன் (தயவாய்)

2) அந்தமாம் இதழ் தாருமென்று
அனுசரித்தது அறிவேன்
தந்தரேகை வைத்து இதழ்
தந்த மார்க்க மறியேன் (தயவாய்)

3) தேடரிய தமிழ் வாசு
தேவன் போற்றும் சாகேந்திரன்
ஆடை நெகிழ்த்த தறிவேன்
அப்பால் என்னை யான் அறியேன்.
(தயவாய்)

இராகம்: காபி                    தாளம்: ஆதி

பல்லவி

மிஞ்சுதென் மோகம் உன்மேல்—ஸ்வாமி (மிஞ்)

அனுபல்லவி

தஞ்சைவாழ் சாக தீர! சரஸகுண கெம்பீர! (மிஞ்)

சரணங்கள்

1) எந்தன் மனது போலே உந்தன் மனதுமானல்
சிந்தை மனோரதங்கள் வந்துகை கூடும் ஸ்வாமி
(மிஞ்சு)

2) சந்தோஷமாய் உன்னிதழ் தந்துமேவுமென்று நான்
எந்தவிதம் சொன்னாலும் இந்த தாமதமேது (மிஞ்)

3) காமன் கணைக்கும் இறை சோமன் தனக்கும் பகை
ராம! ராம! பெண் ஜென்மம் ஆமோ எவர்க்கானாலும்
ஸ்வாமி (மிஞ்சு)

4) உந்தன் மீதினிலே மோகமாகியே
உரோமலான என்னுடன் நீ மோடி செய்யலாமோ
(மிஞ்சு)

5) அருமை அறிந்த நீ! ஒருமையுடனிளமைப்
பருவந் தனில் ஒருநாள் மருவிப் பிரியப் போமோ
(மிஞ்சு)

6) அருள் வாசுதேவன் மீதில் கருணை புரக்கும் போச!
திருவே அளகையில் வரு'சாக' மகாராச! (மிஞ்சு)

———

# பாடல்களின் அகர வரிசைப் பட்டியல்


| பாடல்கள் | இராகம் | தாளம் | பக்கம் |
|---|---|---|---|
| அகத்தில் புருஷன் | மத்யமாவதி | ஆதி | 14 |
| அடிக்கடி மோடி | சுருட்டி | ஆதி | 35 |
| அதட்டிப் பார்க்கிறீர் | வசந்தா | ஆதி | 45 |
| அபரஞ்சி யென்றொருமாது | ஆரபி | ஆதி | 24 |
| அருமை அறிவார் | பிலஹரி | ஆதி | 4 |
| அறிவேன் எனக்கொருத்தி | கானடா | ஆதி | 25 |
| அளகனைக் கோதி | பிலஹரி | ஆதி | 54 |
| ஆசை மிஞ்சுதே | ஆகிரி | சாபு | 10 |
| ஆதிநாள் முதல் | — | — | 63 |
| இங்கே வருவானேன் | சங்கராபரணம் | கண்டசாபு | 12 |
| இப்படிச் சொன்னால் | வசந்தா | ஆதி | 30 |
| இத்தனை மோடி ஏது ? | பரசு | ஆதி | 14 |
| இந்தவேளைக்குப் | ஆபோகி | ஆதி | 55 |
| இல்லை இல்லையென்று | கமாசு | ஆதி | 36 |
| இன்னேரமே | தோடி | ஆதி | 33 |
| உமக்கேத்த வகை | சாருகேசி | ஆதி | 28 |
| உன்னைத்தேடிப் தேடிப்போனாள் | கரஹரப்பிரியா | ஆதி | 28 |
| உனக்குஇப்போது | பீம்ளாஸ் | ஆதி | 16 |
| எந்தன் பூஜா பலமும் | யமுனகல்யாணி | ஆதி | 9 |
| எந்தன் விரகவெள்ளம் | சகானா | ஆதி | 9 |
| என்செய்வேன் | பைரவி | ஆதி | 41 |
| என்ன செய்வேன் | சிந்துபைரவி | ஆதி | 13 |
| என்ன செய்வேனடி | தோடி | கண்டசாபு | 7 |
| என்னதான் கோபம் | வசந்தா | ஆதி | 1 |

| | | | |
|---|---|---|---|
| என்னமாய மோகம் | சிந்துபைரவி | திச்ர நடை | 22 |
| ஒரு நாழிகை | கமாசு | ஆதி | 50 |
| ஐயாசாமி நீ வாடா | காபி | ஆதி | 49 |
| கண்டுமையல் கொண்ட | தேஷ் | ஆதி | 44 |
| கனராசகாரியமிது | கல்யாணி | ஆதி | 9 |
| காதல் மிகவானுள் | கல்யாணி | கண்டசாபு | 39 |
| காதலாய் மனங்காயுதே | பைரவி | சாபு | 7 |
| கிள்ளை செகித்தது | இந்தோளம் | ஆதி | 52 |
| கும்பிட்டேன் என்று | சகானு | ஆதி | 32 |
| சந்திரமுகி உந்தன் | சக்ரவாகம் | ஆதி | 51 |
| சமூகம் கண்டேனே | ஸாவேரி | ஆதி | 47 |
| சருகுதேரகம் | பூர்விகல்யாணி | ஆதி | 2 |
| சாகேந்திரன் வாராஞே | சாரங்கா | ஆதி | 17 |
| சும்மா என்மேலென் | கல்யாணி | ஆதி | 32 |
| சுருசம்கண்டே உளவு | ரீதிகௌளை | ஆதி | 4 |
| மருவா திருக்க | ஹம்ஸானந்தி | ஆதி | 4 |
| சுப்ரபாதம் சுப்ரபாதம் | பூபாளம் | ஜம்பை | 6 |
| தப்பியோடிப் போங்கள் | கல்யாணி | ஆதி | 6 |
| தயவாய் எந்தனை | கேதாரகௌளை | ஆதி | 6 |
| தருணி அவன்மீதில் | காபி | ஆதி | 2 |
| தூதாய் யான் அனுப்பின | சுருட்டி | ஆதி | 35 |
| தூது தான்போனமாது | ஆகிரி | சாபு | 34 |
| தேவியுன் பாதம் | பாகேஸ்ரீ | ஆதி | 4 |
| தொடவேண்டாம் | ஷண்முகப்ரியா | ஆதி | 45 |
| நயமாய்ப் பேசுறீர் | காபி | ஆதி | 48 |
| நில்லடி, சொல்லடி, | அடாணு | ஆதி | 43 |
| நேசமில்லாத பெண்மேல் | பைரவி | ஆதி | 59 |
| பதரவேண்டாம் | மோகனம் | ஆதி | 56 |
| பேராசை ஒருமின்னுள் | காந்திமதி | கண்டசாபு | 38 |

| | | | |
|---|---|---|---|
| பேரசை தீராதே | சகானா | ஆதி | 5 |
| பொதுமாதராசை | ஆரபி | ஆதி | 58 |
| மங்கைப்பருவ வஞ்சி | ஆகிர்பைரவ் | ஆதி | 54 |
| மாட்டோமென்னுதே | யமுனகல்யாணி | ஆதி | 57 |
| மானே சாகேந்திரன் | தோடி | ஆதி | 23 |
| மிஞ்சுதென் மோகம் | காபி | ஆதி | 66 |
| மின்னார்கள் மதனன் | சகானா | ஆதி | 53 |
| மின்னே! இன்னேரம் | ஷண்முகப்பிரியா | கண்டசாபு | 8 |
| முகமறியாது போல | சிவரஞ்சினி | ஆதி | 26 |
| மெத்தநாகரிகக்காரிகள் | யமுனகல்யாணி | ஆதி | 37 |
| மையல் கொண்டாலும் | மோகனம் | ஆதி | 21 |
| மையலே கொண்டேன் | சுப.பந்துவராளி | ஆதி | 16 |
| மோடி உனக்கென்னடி | கல்யாணி | ஆதி | 20 |
| மோடி ஏனையா | நாதநாமகிரியை | ஆதி | 18 |
| ரதிசமயத்திலிந்த | நாயகி | ஆதி | 20 |
| வரச்சொன்னேன் | மோகனகல்யாணி | ஆதி | 29 |
| வரவர என்மையல் | சுருட்டி | ஆதி | 31 |
| வாசலில் வாரானே | ஆரபி | ஆதி | 11 |
| வாடி வாதென்னடி | சாருகேசி | ஆதி | 33 |
| வாடி வாய்முத்தந்தாடி | தோடி | கண்டசாபு | 27 |
| வாராய் சாகேந்திரா | காபி | ஆதி | 3 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நமது முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்து உதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**T. R. இராமசாமி**, I.A.S.,
மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
6—12—85.